Q22:38·2162
M76

115195

ஸ்ரீவேங்கடேசாயநம:

ஹரியஜனை கீர்த்தனமென்னும்

# திருப்பதிவேங்கடேசுவரர்

## தேர்வண்டிக்கால்சரித்திர கீர்த்தனம்.

இஃது

குன்றுபுரமென்கிற

குன்றத்தூர் சுப்பராயஐயரால்

பாடப்பட்டது.

ஷை யூர் சங்ககவுண்டன் குமாரன்

சீரங்ககவுண்டன் கேட்டுக்கொண்டபடி

—

சென்னை.

வியவஹாரதரங்கிணீ அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1876.

M76

## விஜயமங்கலம் நாரணய்யர்பாடிய

## சாற்றுக்கவி.

விருத்தம்.

கலமிகுஞ்சுக்குலச் சம்வச்சரம்புரட்டாசி
நற்றேதிமூன்று
கனிமிகு சுக்கிரவா ரந்துவாதேசியும்
நன்குதிருவோணமதிலே
அலர்மேலு மங்காசமேதஸ்ரீரத்ததிரு
ளானவண்டிச்சரித்திர
மதுகன்னடத்திலே முதியோருலாத்தை
அம்புவியெலாமறியவே
குலமதிலுயர்ந்தவன் குன்றைமாநகருளோன்
கோதிலாயெஜுர்வேதியன்
குணமிகும லட்சுமிநா ரணபூசுரன்றரு
குமாரன்சுப்ராயவைய்யன்
நிலைபெறவெ ஹரிபஜன கிர்த்தனமெனப்பாடி
லெக்ஷ்மிநா ரணதேவர்முன்
நெடுநிலமெலாம்புகழவேயரங்கேற்றினர்
நீடூழிவாழியென்றே.

---

## திருப்பதியில் அரங்கேற்றியபோதுபாடிய

## சாற்றுக்கவி.

ஆசிரியவிருத்தம்.

இஃது.

குன்றத்தூர் பெரியணயக்கவிஞர் குமாரர்
சுப்பராயஅய்யர் இயற்றியது.

சீர்கொண்[illegible]யுகசகாப்தம்நாலாயிரஞ்
சே[illegible]ந்தொளாயிரத்திற்
செப்[illegible]மெழுபத்தொன்றதிலேசுக்குலவருட
ஜயமிகுமடந்தைமாதம்

## சாற்றுக்கவி.

பேர்கொண்டமுப்பதாங்தேதிகுருவாரம் ... ... ... ...*
பிரங்குதசமித்தினத்தில் ... ... ... ... *
பிரசன்னவேங்கடரமணசுவாமிசன்னிதியிலே ... ... ...*
பெருஜீயாறுமதிரிலே ... ... ... ... ...*
பார்கொண்டகொங்கிற்குறுப்புவளநாட்டிலே ... ... ...*
பண்புகுன்றூர்புரம்வாழ் ... ... ... ... ...*
பன்னுமெசுர்வேதியன்சுப்ருயபாரதிதன் ... ... ...*
பாக்கியவிசேஷத்தினாற் ... ... ... ... ...*
தேர்கொண்டவண்டிச்சரித்திரக்காதையைத் ... ... ...*
தீந்தமிட்கீர்த்தனமதாய்ச் ... ... ... ...*
செய்தாங்கேற்றினர்ஸ்ரீனிவாசன்கிருபை ... ... ...*
சிறந்துமிகவாழியென்றே ... ... ... ...*

---



ஸ்ரீவேங்கடேசாயநம:
நிர்விக்னமஸ்து.

பாயிரம்.

திருப்பதிவேங்கடேசுவரர்

# தேர்வண்டிக்கால்சரித்திரம்.

## விக்கினேசுவரத்தோத்திரம்.

### ஆசிரியவிருத்தம்.

அம்புவியிலே சகல சம்பிரம மிகுத்திடும் அழகுமிகு பாகநகரம் ... ... ...*
அதிலெலொருபிராமணப் பதிவிரதை மைந்தனில்லாம லரியைத்துதித்தென் .. *
கும்பிதனிலொருசுதனை யீன்றிடுவளதிலக் குமரனைத்தேர்வண்டியிற் ... ...*
கொற்றவாதருகிறேன் பெற்றவளிவள்யென்று குவலயஞ்சொல்லவைப்பாய் *
அம்புயக்கண்ணனே திருவேங்கடேசனே ஆதியேயென்றுவேண்ட ... ...*
ஹரியதுவரந்தந்து சிறுவனைத்தேர்வண்டி யடியிலிட்டதின்மேல்வரும் ... *
கம்பீரமானகதையைப் பாகவதர்பஜனைகீர்த்தனமெனப்பாடவே... ... ...*
கேசவன்கீர்த்திவிசுவாசமங்களகரக் கணபதிபதந்தொழுதுதே. ... ... *

### தரு-இராகம்-உசேனு- தாளம்-அட்தாளச்சாபு.

#### பல்லவி.

கணபதினீயே யெனக்குப் - பக்கத் துணை வருவாயே.

#### அநுபல்லவி.

பணங்கொண்ட அரவக்கங் கணம்பெருந் தூயனே
கணங்கொண்ட தேவர்ச ரணந்தொழு னேயனே. (கணபதி)

#### சரணங்கள்.

க. மோதகதரனே மூலாதார மூர்த்தியைங்கரனே
நீதம் விழையுஞ்சதுர் வேதம்பரவியலம்
போதரவனையன்றி யாதரவெவர்சொல்லும் (கணபதி)

உ. சாமரகர்ண முக்கண்ண சரச்சசிவர்ண
தேமுக்கனி கரும்புந் தேங்காயதி ரசமே
தாமெத்தவும் விரும்புந் தழைக்கு மதகசமே (கணபதி)

ந. அருகணிசீலா குன்றையகி லாம்பிகை பாலா
தரணிபுகழும்ரதச் சக்கிரச்சரிதஞ் சொல்லக்
கருணைகொடுத்து - முற்றுங் - காத்துரக்ஷியும் நல்லக் (கணபதி)

## ஆழ்வார்தோத்திரம்.

(௨) விருத்தம்.

கருகூரம்புயமேனிக்]சன்னபிரான்றிருவடியைக் கருதிப்பாடத் ...*
திருகூர்வெஞ்சிக்தையினேன் றீவினையேன்ஜகவாசிதியினல்லோலச*
சருகூரொனும்படியே தத்தளிக்குந்தமியேஞ்சஞ்சலந்தீர்த்தாளுங் ...*
குருகூராழ்வாருபயக் கோலபதாம்புயமலரைக் கும்பிட்டேனே ...*

(௨) தரு-இராகம்-பைரவி-தாளம்-ரூபகச்சாப்பு.

பல்லவி.

ஆழ்வார்திரு - வடிகளேசரணம் சடகோபகம்
மாழ்வார்திரு - வடிகளேசரணம்.

அனுபல்லவி.

ஆழ்வாரடி - சாழ்வார்களை-யாழ்வார்வெகு-வாழ்வாகவே (ஆழ்வார்)

௧. அதிசந்திர மதிசந்திர நிதிமந்திர யதீமீந்திர. (ஆழ்வார்)
௨. ஒருனோ யிரமாகிய திருவாய்மொழிக் குருவாகிய (ஆழ்வார்)
௩. சதமாயரி பதமுண்டென இதாத்துன மதகண்டன (ஆழ்வார்)
௪. திடமாயரி யிடமேவுதற் கிடமாகிய சடகோபனம் (ஆழ்வார்)

## சரஸ்வதித்தோத்திரம்.

(௫) கலித்துறை.

வெள்ளைக்கலைச்சி விகிறைவிடத்திகன வெண்கமலக் ... ... ...*
கிள்ளைக்கரத்தி கிதாமிருகத்தி கிளிமொழிச்சி ... ... ... *
எள்ளத்தனையு மிடராமல்வாக்கு யினிக்கவேயென் ... ... ...*
உள்ளத்திருந்து உதவிசெய்வாலையா முத்தமியே. ... ... ... *

தரு-இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

தாயே தனையனுக் கருள் தருவாய் சரசிருகமதில்வளர்
தாயே தனையனுக்கருள் தருவாய்

அனுபல்லவி.

ஆயுமறையவன்றன் வாயில்வளர்நிதியே
நாயேன்சொல்லுங்கவிக்குட் டோயுஞ்சரஸ்வதியே (தாயே)

சரணங்கள்.

௧. வாணி மதுரமிகுஞ்சொல் வாணி ளைஜானன்மருவிய
ராணி கலினி நித்தியகல் யாணி
ஆணிமுத்தினப்பணி பூணிபுஸ்தககக பாணிவீணிபணி
வேணிதிராணிமிகுந் (தாயே)



எழுமலையவன்சரித்திரத்தை அடியேன்பதனைகள்செய்து
நாளுந்துதிக்க கல்குணவவரத்தை
வாளேனும்வீழியி லாளேயுனதுதிருத்
தாளெசரணமெந்த வேளையிலுங்கிருபைசெய் (தாயே)

௨. ஆறுமுகக்குமரனை யபெத்தாய் அரன்செவியிற்பிரணவத்தைக்
கூறும்படியருள் மிகக்கொடுத்தாய்
ஆரணியெனும்பரிபூரணியுனதிட காரணம்புகலுமுன்
காரணம் நீயெந்தன் (தாயே)

## அகிலாம்பிகைதுதி.

(௬) விருத்தம்.

செந்திருவளருமார்பன் திருப்பதிவேங்கடேசன் ... ... ...*
வந்தகல்விரதவண்டி மகத்துவச்கதையைப்பாடச் ... ... ... *
சந்ததம்மதுரவாக்குத் தப்பாமற்கொடுத்தாக்ஷி ... ... ... ...*
சுந்தரிகுன்றையூரிற்]றுலங்கிலாம்பிகேயே. ... ... ... ... *

(௬) தரு-இராகம்-மத்திமாவதி-தாளம்-அடசாப்பு.

பல்லவி.

அம்பாகிருபைசெய்குவாய் அகிலஜக
தம்பாகிருபை செய்குவாய்.

அனுபல்லவி.

வம்பார்முலைமயிலே குண்டபுரிநீசன்
வாமியெனுமபி ராமிகிருபைசெயும்னேமிநீசிவ காமிசந்தரி (அம்பா)

சரணங்கள்.

௧. வேதாகமவடிவே-சச்சிதானந்த போதஞானமுடிவே
பூதபௌதிக ஜனை பேதவுயிறைப்பெற்ற
புனிதையடியவர் மனதில்கடமீதி
வனஜபதயுக வனிதை யெனுந்திருபுர (அம்பா)

௨. ஆதிபராசத்தியே பிரம்மானந்த
சோதிவடிவத்தியே - பாதிமதிஜடை லோதிமமெகல்விப்
பாக்கியங்களைத் தேக்கியெனதிட வாக்கில்மதுரம
தாக்கி கிருபைபுரி. (அம்பா)

௩. மஞ்சார்குழல் மயிலே பூஞ்சாகேசரிப்
பஞ்சாம் வாழ்குயிலே நஞ்சார் மிடற்றரன் கொஞ்சுங்கிளியே
திவ்ய கனினதாபுர சரணமிருககப
கருணசாகர தருண திருபுவன (அம்பா)

## சுப்பிரமண்ணியர் துதி

(௫) விருத்தம்.

மருமலர்த்துளவமாயன் வளர்திருவெங்கடேசன் ... ... ... *
வருமிரதத்தின்வண்டி மகத்துவக்கதைகளைப்பாடக் ... ... ...*
குருமுனிக்குபதேசித்த குமரசற்குருவேயெந்தன் ... ... ... *
அருகில்வந்துதவிசெய்து அனுதினங்காக்கவென்றே ... ... ...*

(௫) தரு-இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

வேலுமயிலனைக் காலுந்துணைசெய்யவே - அதி
வீரதீரவடி - வேலுமயிலனைக் - காலுந்துணைசெய்யவே.

அநுபல்லவி.

ஆலமருந்துந்திரி சூலன்செவியினில்
மேலும்பிரணவந்தன் னுலையருள்வடி. (வேலு)

சரணங்கள்.

௧. ஆறுமுகமு மீ ருருபுயமுடையோன் அமருடியவசுரனை
வேருகளைந்தகெம் பீர ஐயமுடையோன்
பாரமிருந்திடும் ஆரமருவுமொரு
யாரண்மதுரையில் மாரனெனவந்த (வேலு)
௨. தூயவொவற்குஞ்ச காயஞ்செயுமுருகன் துளவொடு கவுஸ்துபமணி
மாயன்றனக்கதி னேயமிகுமருகன்
சேயனவன்காங் கேயன்கார்த்தி
கேயன்பத்தச காயன் ஒளிர்விடு (வேலு)
௩. பூமிபுகழ்சிவ காமிதருகுகனே புரந்தானருள்குஞ்சரி
வாமியொடுகுற மாமகள் மணமகனே
ப்ரேமையொடுவந்து க்ஷேமங்கொடுத்தருள்
னேமன்கடைப்பையந் தாமன்சுந்தர (வேலு)

## ஆஞ்சனேயர் துதி.

(௬) விருத்தம்.

அஞ்சனைபாலனாகி யதிபலபீமனாகி ... ... ... ...*
முஞ்செய்ராமாயணத்தும் மொழியும்பாரதத்தும்வந்து ... ... *
கஞ்சகம்பதவிவேண்டுங் கருணைமாருதியைப்போற்றி ... ... ...*
இஞ்சொலாலரிதேர்வண்டிச் சரித்திரமியம்பினேனே ... ... *



(௬) தரு-இராகம்-கலியாணி-தாளம்-அடதாளச்சாப்பு.

பல்லவி.

நீயேதுணைவருவாய் ஆஞ்சனேய
நீயேதுணைவருவாய்.

அநுபல்லவி.

நீயேதுணைவருவாயெ திருப்பதி
மாயன்றனக்கதி னேயமிகுந்திடும் (நீயே)

சரணங்கள்.

௧. காகுத்தன் றனை யடுத்தாய் சீதையைத்தேடிக்
கண்டுகையாழி கொடுத்தாய்
வேகமாகச்சஞ்சீவித் தியாகிநீயுமெதாவிப்
போகிப்பரதற்காவி ஈயுநற் சிரஞ்சீவி (நீயே)
௨. பஞ்சவருடன்பிறந்தாய் பீமனெனவே
பாரோர்புகழ்ச்சிறந்தாய்
வஞ்சக்கௌரவரென்னும் பஞ்சைப்பறக்கவிட்ட
மிஞ்சும்பல மாருதி தஞ்சங்கிருபைவாரிதி (நீயே)
௩. தோத்திரஞ்சொல்லவறியேன் உன்கருணைக்கி
ஆத்திரமுள்ள சிறியேன்
கீர்த்திமருவும் வேங்க டாத்திரி வளரும் நல்ல
மூர்த்தி ரதச்சக்கரத்தின் கீர்த்திக் கதையைச்சொல்ல (நீயே)

## லட்சுமீநாராயணசுவாமி துதி.

(௭) விருத்தம்.

அச்சுதன்வேங்கடேச ரனுக்கிரகமதனைப்பாரி ... ... ... ...*
உச்சிதமாகக்காட்டு முருட்சரிதத்தைப்பாடக் ... ... ... *
கச்சணிமுலைப்பொன்மாதைக் கையுறத்தழுவிவாழும் ... ... ...*
லக்ஷுமிநாரணர்பொற்பாதம் னேசித்தேன் பூசித்தேனே... ... *

(௭) தரு-இராகம்-சங்கராபரணம். தா-அ-சாப்பு.

பல்லவி.

நாராயணவுன்னை நம்பினேன்
கோரதுரிதபரி ஹாரானெ தலக்ஷுமீ (நாராயண)

அநுபல்லவி.

காராரிரங்கொள் சரீராவுயர்குன்றை
யூராதுளவணி மாராலக்ஷுமீ (நாரா)

சரணங்கள்.

க. ஆலிலேதனிற்படுத்தோனே துரோபதைவேண்ட
அக்ஷயத்துகில்கொடுத் தோனே
ஞாலமதனையொரு காலிலேயளர்த
சீலவாமனவனு கூலராமவைகுர்த (நாரா)

உ. கல்லைப்பெண்ணாக்கிய காலனே-பாண்டவரைக்
காத்துரக்ஷித்தகோ பாலனே
பல்லுயிற்குயிராயெ பரமஆத்துமா நீயெ
கல்வியைத்தரு வாயெ கருணாநிதியெ லட்சுமீ (நாரா)

கூ. பக்ஷிவாகனப்பத்ம நாபனே குன்றுபுரி
பாக்கியமடையுஞ்சொரூபனே
மச்சாவதாரனெ வளர்வேதோத்தாரனே
மதகஜவரதனே மாரஜனகலட்சுமீ (நாரா)

## ஸ்தலவிசேஷம்.

### (அ) விருத்தம்.

பூமகளுலவுமார்பன் புகழ்திருவெங்கடேசன் ... ... ... ...*
ருமுருரதத்தில்வண்டிச் சரித்திரங்கமிழாம்செய்ய... ... ... *
நேமமோடரிதன்சேவை னேர்ந்ததென்பாக்யமென்று ... ...*
ஸ்வாமிபுஷ்கரணியான்றன் றலப்புகள்சாற்றினேனே ... ... *

### (அ) தரு-இராகம்-கேதாரகௌளம்-தாளம்-அட்தாளச்சாப்பு.

பல்லவி.

கண்டேன்கண்டேனெ வேங்கடேசனைக்
கண்டேன்கண்டேனெ ஆனந்தங்கொண்டேன்கொ... ...டனே.

அநுபல்லவி.

கண்டேன்லர்மேலு மங்கைசமேதனைக்
கண்டேன் பக்தற்குக் கருணைப்பிரசாதனைக் (கண்டே)

சரணங்கள்.

க. கோவிந்தராஜர்பட் டணம்வந்துகூடியெ
கூருமரசிம்ம தீர்த்தத்தி லாடியே
கோவிந்தராஜனைக் கும்பிட்டுச்சூ டியெக்
கொடுத்தபீசனைச்சி யாறைக்கொண்டாடியே
கோசலையருள்பாலனை லட்சுமணனைக
கோரியேவடிவே லனை யருள்கபில
ஈசத்திரிசூ லனைப் பாலபிஷேகம்
யென்றுஞ்செய்யநுகூலனை வணங்கியெ



கோதிலாச்சதுர் வேதமோதிய வாதிமறையவ ரோதுமந்திர
மீதுசிந்தைவைத் தோதுகபிலக் கியாதிமிகுபுனல் மீதிலாடியெ. (கண்டேன்)

உ. சேஷகிரிமதலிற் தேவர்சரண்மரண்டு
திரமாங்காளிகோபுரத் தேங்காயுடைத்துண்டு
பாஷிங்கனரசிம்ம சாமியொருவருண்டு
பாதையிலேயேழு பர்வதமுடிவுண்டு
செம்பொன்விமானங் கண்டு மண்டபம்பொன்னிற்
செய்ததெத்தலத்தி லுண்டு கோபுரவாசல்
அம்பொற்படியுர் திரண்டு நின்றிடுஸ்தம்பம்
ஆனதுஞ்செம்பொன் கொண்டு விளங்கிடுஞ்
செழிக்கும்ஆகிவராக தீர்த்தமும் ஸ்வாமிபுஷ்கரணியெனுந் தீர்த்தமும்
அழுக்கறும்புனல் ஐவர்தீர்த்தமும் அனந்ததீர்த்தங்கள் ஹரிதன்பாதத்திற் (கண்)

கூ. கோவிந்தாவெனச்சொல்லிக் கூறுமணியினுதங்
குறிப்பில்வந்தவர்க் கெல்லாங் கொடுப்பர் ஹரிதன்பாதஞ்
சேவைசெய்தவர் பலஞ் செப்பவெளிதோ வேதஞ்
சென்மசாபல்லியந் தீர்த்தமும்பிரசாதங்
கோடிபூஷணம் மித்தமும் சாளிக்கிராமங்
குல்லையாரமுஞ் சத்தமும் சங்குசக்கிரஞ்
சூட்டுங்கரப்பிர சித்தமும் அபயமொடு
சொல்லும்வரத ஹஸ்தமும் ரத்னகிரீடக்
குண்டலனைமுக மண்டலனைப்பிர சண்டமிகுகோதண்டமருவிய கொண்
டல்வண்ணனை மண்டலத்தில்வை குண்டமெனநிலை கொண்டமூர்த்தியைக் (க)

ச. ஆதிவருகனை யன்புடன் றெரிசித்து
அப்பால்ஸ்ரீனிவாஸ ரனுஞ்ஞைகொண்டுருசித்து
ஸ்ரீதரன்காணிக்கை செலுத்தியெ அர்ச்சித்து
தீபாராதனைச்சேவை செய்து ஸ்பரிசித்துத்
தீர்த்தங்கொடுக்கப் பெற்றேனே திருவடியெனு
சென்னிக்கணிய லுற்றேனே ஸ்ரீஹரியென்று
கீர்த்தனஞ்செயக் கற்றேனே யெனைப்பிடித்தக்
கிலேசம்போய்சுக முற்றேனே பருவதம்விட்டு
அழகுமிகும் அலர்மேலுமங்கா அன்னையடி தொழுதென்னையருளிய
துளபமணிவெங்கடேச ஸ்ரீஹரி துணைவியகிலாம்பிகையையூர்வந்து (கண்டே)

## லக்ஷிமிதோத்திரம்.

### (கூ) வெண்பா.

கண்டமுதம் பால்பழமாங் கவிமழையைப் பொழியுமொரு ... ...
கொண்டலரி லாம்பிகையைக் கும்பிட்டே - யண்டர்தொழுந் ... *
திருவேங்கடேச்சுரனைச் செந்தமிழாற் பஜனிக்கத் ... ... ...*
திருமகளையே துதிசெய் தேன். ... ... ... ... ... ... *

(௯)தரு-இராகம்-சங்கராபரணம்-அடதாளச்சாப்பு.

பல்லவி.

லக்ஷிமீவுனை நம்பினேன் சந்ததம்வித்தியா
லக்ஷ்மீவுனை நம்பினேன்.

அனுபல்லவி.

லக்ஷ்மீவுனைநம்பினேன் நித்தியமெனவுமுனை
பக்ஷிவாஹனன்மானே பாக்கியமிகுந்தேனே. (லக்ஷ்மீ)

சரணங்கள்.

க. ஸ்ரீலக்ஷ்மீ ஜயலக்ஷ்மீ தேஜோலக்ஷணலக்ஷ்மீ
பூலக்ஷ்மீ புஜலக்ஷ்மீ புத்திரபாக்கியலக்ஷ்மீ (லக்ஷ்மீ)
உ. கோலக்ஷ்மீ குணலக்ஷ்மீ கொடுக்குந்தருமலக்ஷ்மீ
மாலக்ஷ்மீவரலக்ஷ்மீ வாக்கில்வளரும்லட்சுமீ. (லட்சுமீ)
ங. சேஷகிரீசனைத் தினமும்மருவும்லட்சுமீ
தாசன்சுப்பராயன் தமிழ்க்கருளும்லட்சுமீ. (லட்சுமீ)

## மனதையுபசரித்தல்.

(௧0) விருத்தம்.

ஹரிபஜனையைநீசெய்து ஹரிகிருபைபெறுவையாகில்த் ... ... *
திருமகளுலவுமிந்தச் செகத்தனுக்கரசனுகித் ... ... ... ... *
தருமமேமுதலாயுள்ள சதுர்விதபலமும் பெற்றுப் ... ... ... *
பரமபாகவதாள்போலப் பாக்கிய மடைவாய்நெஞ்சே ... ... *

(௧0) தரு-ராகம்-யமுனகலியாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

பஜனைசெய்மனமே பஜனைசெய்வாயரி
பரம்புருஷனை நீபஜனைசெய்வாய்.

அனுபல்லவி.

பஜனைசெய்மனமே பஜனைசெய்வாய்ஹரி
பக்தவத்சலனைப்பஜனைசெய்வாய்
பஜனைசெய்மனமே பஜனைசெய்வாய்ஹரி
பாற்கடல்சயனனைப் பஜனைசெய்வாய் (பஜனை)

சரணங்கள்.

க. ஜனார்த்தனனைப் பஜனைசெய்வாய்நீ
துஷ்டசம்மாரனைப் பஜனைசெய்வாய்
கெஜவரதனை நீ பஜனைசெய்வாயரி
கௌரிதமயனைப் பஜனைசெய்வாய் (பஜனை)



உ. நந்தகுமாரனைப் பஜனைசெய்வாய்நீ
நவனீதசோரனைப் பஜனைசெய்வாய்
சுந்தரதேகனைப் பஜனைசெய்வாய்நீ
கமலைவைபோகனைப் பஜனைசெய்வாய் (பஜனை)
ங. சேஷகிரீசனைப் பஜனைசெய்வாய்நீ
திருப்பதிவாசனைப் பஜனைசெய்வாய்
பாஷ்யநரசிம்மனைப் பஜனைசெய்வாய்பஞ்ச
பாண்டவர்மித்திரனைப் பஜனைசெய்வாய் (பஜனை)

## சந்தானகோபாலகிருஷ்ணர்துதி.

(௧௧) தரு-இராகம்-சங்கராபரணம்-தா-அ-சாப்பு.

பல்லவி

கிருஷ்ணமிருதம்புஜி மானஸகோபால ஸ்ரீகிருஷ்ண.

அநுபல்லவி

கிருஷ்ணமிருதம் புஜித்திட்டால் பவப்பிணி
விட்டுவிலகிச் சுக நிஷ்டைபெற் றிடுவாய்நீ. (கிருஷ்ண)

சரணங்கள்.

க. காமாதியில்முழுகாதே முழுகியெ
பாமரனையமுகா தெ
ராம்நாதுளசியந் தாமாரவிகுல
சோமாஆயிரனுமர்வெனச் சொல்லிக் (கிருஷ்)
உ. ஆசாரத்தைமறைக்காதே மறைத்தரி
பூஜாவிதிகுறைக் காதே
சேஷசயனஸ்ரீ ஸ்ரீ வாஸதாமோதர
கேசவஹரிகம லாஸனபூஜித (கிருஷ்)
ங. தேவாதிகட்கனுகூலனை நிசாசரீ
மாபாவிகள்குலகா லனைப்
பூவால்வடிதமிழ்ப் பாவாலருச்சித்து
நாவால்ஸ்ரீபத்ம னுபாவெனச்சொல்லிக் (கிருஷ்)
ச. கோகுலம்வளர்த்தகோபாலனை சுகாத்தியான
பாகவதர்க்கனு கூலனை
வாகுமிகுங்கோபி மார்களைமருவிய
ரோகிணிதினநீல மேகசொரூபஸ்ரீ (கிருஷ்)

## கதைப்புகட்சி.

### (௧௨) தரு-இராகம்-தன்னியாசி-தாளம்-ஆதி.

பல்லவி

ஹரிரதசக்கிர சரித்திரந் கதையே
அமுதமாம் ஸ்மதையே

அநுபல்லவி.

பருவதம் சேஷா சலமது பாரும்
பாற்கடல்சாமிபுஷ் காணியைத்தேரும் (ஹரிரத)

சரணங்கள்.

௧. தரிதிருப்பதியெ சரிவளமாம்பூ
தலப்பெருமையெ தாம்பூ
கருசனமாகவெ தாசரும்ராஜரும்
கடைந்துயெடுப்பதுண்டு காரணமதுகண்டு (ஹரிரத)

௨. அந்தவமுதில்ளிதஞ் சிந்தையில்லாதவரெ
அதிற்பிறந்திடும் விஷமாம்
அந்தவிடத்தினையுஞ் சிந்தவிடாமலெ
அரன்கொண்டதும் ஹருஷமாம் (ஹரிரத)

௩. அமுதைத்திருடும் அசுரனைப்போ லரிலவசுதன்
அடையிலரிக்கென் ஞளைத்தாள்
சுமந்துபெத்துப் பின்மறந்தா ளவள்மேற்றெர்
தூண்டியரி யவளையாண்டிடு வதுவெனேர் (ஹரிரத)

௪. ஸ்ரீனிவாஸ மோஹினி கிருபைக்காரத்தால்த்
திருஜகவி பதர்பெருவார
ஆனந்தமுடனந்த வமுதந்தைபுண்டார்
அரசாயவரோ ஹரிபதங் கண்டார் (ஹரிரத)

## ஸ்ரீனிவாஸர் அருள்.

### (௧௧) விருத்தம்.

ஞானமுமறியேனுன்னை நவின்றிட வறியேன்றுக ... ... ...
கானமுமறியேனுந்தன் கதைப்பொழிப்பறியேன்சொல்ல ... ...
தானமுமறியேன் யான்சொற்றமிட்பிழை யறியேனையா ... ...
ஸ்ரீனிவாஸனெநீ யெந்தன் சித்தமே குடிகொள்வாயெ... ... ...



### (௧௩) தரு-இராகம்-சுருட்டி-தா-ஆதி.

பல்லவி.

ஸ்ரீனிவாஸாநீயே உனைத்துதிக்க
ஞானம் அருள்வாயே.

அநுபல்லவி.

தீனரக்ஷக அஞ்ஞானபக்ஷக சுஞ்ஞானசிக்ஷகனெ
தியானதக்ஷகனெ. (ஸ்ரீனிவாஸ)

சரணங்கள்.

௧. நீலமேகதேகா நித்தியநி ரந்தராவைபோகா
ஆலின்மீதுசிறு பாலனாகிவளர் சீலவேணுகோ
பாலகிருஷ்ணனெனுஞ் (ஸ்ரீனிவா)

௨. காளிகோபுரவனெ பாவிய கர்த்தரென்கிறவனெ
ஆழியெடுத்தவனெ ஆழிபடுத்தவனெ
ஆழிவிடுத்திலங்கை யாழிதடுத்தவனெ (ஸ்ரீனிவா)

௩. பானுகோடிதேஜா திருப்பதி பிரசன்னவேங்கடராஜா
ஆனைகூவுமுனை தானெகேட்டுவந்
தோனெயன்பர்பெரு மானெயின்பமிகு (ஸ்ரீனிவா)

## அவையடக்கம்.

### (௧௨) விருத்தம்.

படித்துளபுலவர்முன்னும் பரமபாகவதர்முன்னும்... ... ... ...*
நடித்திடுமடியார்முன்னும் நாயினேன்புன்சொலாலெ ... ... ...*
வடித்திடுதமிழ்ல்வண்டி மகத்துவக்கதையைப்பாடல் ... ... ...*
நடித்திடுமயில்முன்கோழி நடிப்பதற்குவமையாமே ... ... ... ...*

### (௧௪) தரு-இராகம்-பைரவி-தாளம்-அடதாளச்சாப்பு.

பல்லவி.

குற்றமே திருந்தாலும் உத்தமர்கள்திருத்திச்
சுத்தஞ்செய்திடவேண்டுமே.

அநுபல்லவி

கர்த்தன் வேங்கடேசனை நித்தியந்துதிபண்ணப்
பத்தியால் நான்சொன்ன பனுவல்தனிலெ யென்ன (குற்ற)

சரணங்கள்

௧. வேதபுராணங்க ளோதியறிந்ததில்லை
வெல்லும் லக்ஷணம் ஐந்தின் சொல்லையறிந்ததில்லை
மாதவனைத்துதிக்கும் மார்க்கம்அறிந்ததில்லை
வரத்திலுணர்த்ததல்லால்த் திறத்திலுணர்த்ததில்லை. (குற்ற)

௨. விருத்தத்தியல்பறியேன் பொருத்தத்தியல்பறியேன்
மெச்சும்ராகதாளத்தின் உச்சிதமுமறியேன்
பருத்தபதங்கள் சன்றாய் உரைத்திடவும் அறியேன்
பல்லவிசரணங்கள் சொல்லும்விதமறியேன் (குற்ற)

௩. ஸ்ரீனிவாஸன்பதத்தைத் தியானஞ்செய்திடளுனே
தேவியகிலாம்பிகை நாவில்நின்றிடத்தானே
மானிலத்தோர்துதிக்கும் வண்டிக்கதையின்தேனே
மழலைப்பிள்ளைகள்போலே யுளறினேனடியேனே. (குற்ற)

## ௧௫—தரு-கதாசங்கிரஹத்துவாரா

## பாயிரம்.

இராகம்-காகரப்பிரியா-தாளம்-ஆதி.

### பல்லவி.

ஸ்ரீ
ஹரியைப் பஜனைசெய்வீர் சந்ததம்
ஹரியைப் பஜனைசெய்வீர்.

### அனுபல்லவி.

கரியரசனுமே முறையிடவுடனே
விண்ணவினில்வந்தே யருளதுதரும்முற (ஸ்ரீஹரி)

### சரணங்கள்.

௧. துரோபதி துகிலைப் பாபிகளுரியவே
கூப்பிட்டா ளரியென்றோர்பெச்சே யவள்
சோபந்தணியப் பிரதாபவிசித்திரவர்ணத்
துகிலொன்றக்ஷய மாச்சே. (ஸ்ரீஹரி)

௨. இரணியகமியென் றியம்பெனக்களகல்
எத்தனைதெண்டனைவிதித்தான் அந்தப்
பிரஹலாதனன்வேண்ட ஸாஹரிகம்பத்தில்ப்
பிறந்துயிரணியனைச் சதித்தான். (ஸ்ரீஹரி)

௩. தந்தைமடியினிலிருந்த மகனைச்சிறு
தாய்முனியத்தகப்பன் விடுத்தான்பின்பு
அந்தச்சிறுவனும்வை குந்தனை நினைக்கவே
வந்துதிருவப்பட்டத்தைக் கொடுத்தாடுத்தான் (ஸ்ரீஹரி).

௪. தசமுகன்றம்பியை வசவிலக்கிடவே
தசரதராமனை யடுத்தான் அந்த
நிசிசரர்களைக்கொன் றரசவிபீஷணர்க்கன்று
ரகுபதியல்லேவா கொடுத்தான். (ஸ்ரீஹரி)



௫. துஷ்டரைக்கொல்வான் சிஷ்டரைப்புல்வான்
சூக்ஷத்தில் மோக்ஷத்தைத் தருவான்பின்னும்
அஷ்டைசுவரியமும் அவன்றரவல்லால்
ஆரினிக்கொடுத்திட வல்லார். (ஸ்ரீஹரி)

௬. மச்சக்கூர்மவருஹநரஹரி வாமனராமவதாரன் சீதா
லக்ஷ்மிராமன் பலராமகிருஷ்ணன்
கல்கியெனுர்தசாவ தாரன். (ஸ்ரீஹரி)

௭. சங்குசக்கிரம் சார்ங்கம்வாழ்கதை
தங்குபஞ்சாயுதபாணி நீல
மங்குலின்தேகன் மலர்மகள்போகன்
மண்மகள்மருவுமோர் பாகன். (ஸ்ரீஹரி)

௮. ஆழியின்மேலும் ஆலிலைமேலும்
அறிவிலும் அடியவர்மனத்தும் எவ்
வேளையும்வசிப்பன் விழிதுயில்ருசிப்பன்
வேண்டிடவருவனெத்தி னத்தும். (ஸ்ரீஹரி)

௯. கருடவாஹனன் கௌஸ்துவாபரணன்
கனகபீதாம்பரதாரீ நல்ல
மருமிகுதுளசிமார்பன் கமலைஸ்ரீ
வச்சன்வைகுண்ட முராரி. (ஸ்ரீஹரி)

௧௦. சேஷகிரீசன் திருப்பதிவாசன்
ஜகததாற்களுமுல்லாசன் ஹரி
தாசர்கள்போற்றும் வேங்கடரமணன்
தருமசொரூபன் விசுவாசன். (ஸ்ரீஹரி)

௧௧. கலியுகவரதன் காமித பலதன்
காரணக்கதைக ளெத்தனையோ அது
சொலத்திறமுளதோ வாயிரனுவான்
சொலப்படல யுகங்களெத்தனையோ. (ஸ்ரீஹரி)

௧௨. ஆயினுஞ்சிறியேன் ஹரிசரித்திரமாம்
ஆழியிலங்கையினீர் போல் - யென்
வாயினுலரிரத வண்டிச்சரித்திரத்தை
மகிழ்வேன்மழலை மொழிவார்போல (ஸ்ரீஹரி)

௧௩. ஒருவள்தன்மகன்மேல் ஹரிரதவண்டியை
ஓட்டியெழுப்புஞ்சரித்தி ரத்தைப்,
புரந்தரதாசர்கன்னடக் கிருதியால்
புகலும்பண்டிய சரித்திரத்தை (ஸ்ரீஹரி)

௧௪. வளமிருந்தமிழால் விளம்பெனப்புலியோர்
மகிழ்ந்துரைத்திடுமெதிறலே யென்
னுளந்தனிலரிகிருபை வளர்ந்திடவடியேன்
உரைத்தேன்பஜனைக்கென்றிப்பாலே (ஸ்ரீஹரி)

கரு. வேடன்மராமராவென்றுண ஒருஅஜா
மிளனுமனுருவாவென்றுன் அதுபோலப்
பாடினென்றமிழால் வண்டிச்சரித்திரந்தை
பஜனிக்கஹரிகிருபை னன்றும் (ஸ்ரீஹரி)

கசு. ஸ்ரீவேங்கடகிரி ஞராயணஹரி
திவ்யச்சரித்திரத்தைக்கேளும் இந்தப்
பாரினிலெவ்றகும் பாக்கியங்கொடுத்துப்
பதவியுங்கொடுப்பதென் ஞளும் (ஸ்ரீஹரி)

## கசு. தரு - கதாசங்கிரஹம் - துவாரு.

### ராகம்-கரகரப்பிரியா-தாளம்-ஆதி.

### பல்லவி.

தேருருட்க்-கதையிதுவே-கேட்டிடத்
தெகுட்டா திது - மதுவே.

### அநுபல்லவி.

நாரிதன்மகன்மேல்த் தேனாடத்தியெ கு
மாரனையெழுப்புமு ராரிதனதுதிருத் (தேருருட்)

### சரணங்கள்.

க. திருவளர்பாகா நகரதிற் செழிக்குந் தேன்மொழி யாளொரு மாது-அவள்
உ. அருவையற் கரசி அழகிலவளொ ஸ்ரீ அருந்ததி யவட்கிணை யோது
ங. காசிப கோத்திர ப்பூசுரன் றன்திட காதலி யவட்கிணையாரு-அரி
தாசருக் கனுதினம் போஜன முதவுவள் தருமசீலையவள்பேரு. (தேரு)
ச. மைந்தனில்லாமல் மனம்வருந்திடுவாள் வயதொருமுப்பது மாச்சு-அவள்
ரு. சிந்தையி லரியைத் தியானமெசெய்து செப்பினள் அவளுமோர் - பேச்சு
சு. ஸ்ரீஹரிதேவா சின்மயரூபா திருப்பதி வெங்கட ரமணு - இந்தப்
பாரினையளந்த பனிமலர்ச்சரணு பாக்கிய லட்சுமீரமணு.
எ. காமிதபலதா கரிராஜவரதா கனகபீதாம்பரதாரீ - நல்ல
தாமரைக் கண்ணு தருமுகில் வண்ணு சற்சனர்க்கருள்கிருபைவாரீ.
அ. செந்திருமார்பா திருப்பதி வேங்கட தேவா யென்றிருவயிற்றுல் ஒரு
சுந்தனைப்படைத்தால் உந்தேர்வண்டிக் காலுக்கிடுவெனென்று நினைத்தாள்
கூ. புதமெனும் பெருநரகத்தினிற்றள்ளாப் புதல்வனைப்பெற்றுல்ப்-போதும்
உத்தமவுந்தேர் வண்டிக்கிடுகிறேன் உறுதியிதுவென்றுள் - மாது



க0. இந்தப்படியெ அவள் சிந்தையில் நினைத்தே
யிருந்தனள் அவள்தன்பர்த்தா ஒரு
மைந்தன் பிறக்கிற் கனகந்தனிற் பதுமை
வனைக்குவேன் ஹரிக்கெனவுரைத்தான்
கக. மாமனுமுறைப்பான்மகன்சுதன் படைத்தால்
மகிழ்வொடு வேப்பிலை தின்றேஇந்தப்
பூமிபுகழுந்திருப் பதிமலைவந்துனைப்
பூசைபுரிகுவெ னனென்றே
க௨. மாமியும் வேண்டுவள் மருமகள்வயிற்றில்
மைந்தன்பிறப்பதே யானல்த்
தாமரைக்கண்ணு தொட்டிலுஞ்சேயுந்
தருகிறேனென்றுள் தானுள்.
கங. அவரவர்மனதினில் நினைத்ததை யெல்லாந்
ஹரியறியானே கேளும்
இவள் கோரியதை எப்படித்தருவாள்
யென்று அறியவலை யாளும்
கச. கருணைசெய் தவளிட திருவயிறதனிற்
கருப்பந்தரிக்க அவள் கண்டாள்
தருமசீலையும் ஒருபதுதிங்களிற்
றனையனைப்பெற்றெடுத்துக் கொண்டாள்
கரு. ஜாதிமர்பின்படி வேதியற்கெல்லாம்
தானம்பலவுந்தந் தார்கள்
வேதங்களோதியே ஜாதகர்மாதிகள்
விதிவழியே புரிந் தார்கள்
கசு. செந்திரு மார்பன்றிருவருளதனுல்ச்
செனித்த சிறுவனுக்குப் பேரு
அந்தணருளாயால் வேங்கட ரமணனென்
றழைத்தாரவர்களும் பாரு
கஎ. பத்துமாசஞ்சென் றதுபுதல்வனுக்கு
பிரசன்னவேங்கடகிரி வாசன்
...றுவளதனதிட சித்திரைதனில்வந்து
பேசுவர்சொர்ப்பனத்தீசன்.
கஅ. மகரமதியில்நீ மருவரங்கேட்டாய்
மங்கையுன் மனக்குறைதீர்த்தோம்
பகருமுன்மொழிப்படித் தருவாயென்று
பாலன்வரும்வழியைப் பார்த்தோம்.

௧௯. அற்பிசிமாசத் துச்சவ ரதவண்டி
அடிக்குக் கொடுப்பாயுந்தன்சுதனை
சொற்படி ப்ரார்த்தனைசெலுத்தெனச்சொன்னார்
சொப்பனத்தினிலெ அச்சுதனெ.

௨0. நித்திரைதெளிந்தாள் நெடுமூச்செறிந்தாள்
நினைவுகலங்கினாள்மாது
பெற்றமகனைத்தேர் வண்டிக்கிட்டெப்படிப்
பிழைப்பேனென்றழுதாளப்போது.

௨௧. ஹரிதனைத்துதித்தாள் அருமைப்புதல்வனுக்கு
அணிபணிகளையலங்கரித்தாள்
பிரியமுடனெ அதி கருசனமாகவெ
பின்னுமகனையாதரித்தாள்.

௨௨. ஹரியும்வருடம் ஐந்தளவிலும்பொருத்தர்.
அரிவையுந்தான்மிகமறந்தாள்
ஒருமகன்றன்றிருவயிறுவலிக்குதென்
றுரைத்தாளவள்புரபரந்தாள்.

௨௩. வயித்தியர்பலபேர் வந்துகைபார்த்தார்
மாத்திரையவுஷதங் கொடுத்தார்
சயித்தியமென்றார் பயித்தியமென்றார்
தழைக்கும்பிணியாற்கை விடுத்தார்

௨௪. சோதிஷர்வந்தார் துற்றிசையென்றார்
சுரகுருபலமில்லையென்றார்
ஆதிநவக்கிரஹ தோஷமென்றார்சிலர்
ஹரியைமறந்த திதுவென்றார்

௨௫. ஆமிதுநிஜமென்றுரைத்தார் அப்பொழு
தவரவர்பிருது சேகரித்தார்
சுவாமிதிரு வேங்கட ரமண வுன்ப்ரார்த்தனை
தருகுரோமெனவுந் தோத்தரித்தார்

௨௬. திருப்பதியாத்திரைசெய்தார் கபிலத்
தீர்த்தத்தில்ஸ் நானமுஞ்செய்தார்
அர்ப்புத கோவிந்த ராஜனைத் தொழுதார்
ஹரிசரணத்தைத் துதிசெய்தார்.

௨௭. காளிகோபுரங் கண்டார்பாஷியக்
காரரைத் தெருசித்துக்கொண்டார்
யேழுபருவதமுங் கண்டார்வேங்கட
ரமணிருப்பிடமுங்கண்டார்



௨௮. சொர்ணவிமானமும் சொர்ணமண்டபமும்
சொர்ணக் கலசகோபுரமும்
சொர்ணக் கபாடமும் சொர்ண துவஜபடமும்
சொர்ணசபையின்விசித்திரமும்

௨௯. கண்டார் ஆதிவராகரை சாம்புஷ்
கரணியதிசா[illegible]ர்
கண்டாரமணிமயச் சந்தனரதத்தைக்
கண்டார் ஹரிசரண் கண்டார்

௩0. தாசர்கள்செயும்ஹரி கோஷத்தைக்கண்டார்
தரும மஹாந்துவைக்கண்டார்
ராஜீகஸ்ரீனி வாஸரைக்கண்டார்
நல்குரும்உத்திரவையுங்கொண்டார்

௩௧. சன்னதிவந்தார் தனயனுந்தாயும்
தகப்பனும் அவனைப்பெற்றனரும்
சொர்ணப்பதுமையுந் தொட்டிற்குழவியுஞ்
சுவைமிகு வேப்பிலைத்துணரும்

௩௨. காணிக்கைகொடுத்தார் மாமனும்மாமியுங்
கணவனும் இவர்களப்போது
வானுதல்தருமசீலமகனைத்தன்
மடிவிட்டிரக்கிலையம்மாது

௩௩. அருச்சனைசெய்தார் ஹாரதியெடுத்தார்
ஹரிதிருச் சேவையுஞ்செய்தார்
கர்ப்புடையவளரி விருப்புடையவளாய்க்
கருணைக்கடலைத்தெண்டஞ்செய்தாள்

௩௪. தருமசீலரு தனயனும் புருஷனுந்
தமருமொருமடத்தில் வசித்தார்
ஹரிதிருவிசித்திர ரதமதில் வருவதை
யாருஞ்சேவித்துமனம்ருசித்தார்

௩௫. மாதுமகனைரத வண்டியடியிற்றர
வாங்கவெஹரியடம் பிடித்தார் அப்
போதும்சுதனைவண்டிக் கிடுகுடுவெனப்
பூசுரர்களும் வடம்பிடித்தார்

௩௬. கோசாப் மடமுன்னுல் லாசுரதமும்அதிக
குரூரமுடனெ நின்றிடவே
தாசரும்பலபல பூசுரர்களும்அதி
தாபமுடனெ நவின்றிடவே

௪௭. ஹரியொருவர்தன்மேல் மருளதுகொடுத்தார்
அரிவையை மகனையும்பிடித்தார்
சிறுவனையெனதிட தேர்வண்டிக்கிட்டால்த்
திரும்புமி ரதமெனப் படித்தார்

௪௮. அங்குள்பெரியோரவனைமுனிந்தே
அறைகுவரவரவர்தானெ
பங்கயக்கண்ணன் பிரார்த்தனை தவிர்த்தால்
பலயிடர்படுவர் மெய்தானெ

௪௯. காசினிலீசங் காணியும்விடுக்கான்
காணிக்கைவாங்குவன் பேசி-இந்த
ஸ்ரீசன்விடுவனோ திருமகன்றன்னைச்
செலுத்துவைநீயடி தோசி.

௫௰. என்றவர்வைதார் இவள்மணவாளனும்
ஏங்கினன்சவனைப்பெற்றனரும்
இன்றிதுகேட்டோம் என்னடிபாவி
யென்றழுதார்கள் மற்றெவரும்.

௫௧. மைந்தனைவண்டியிற் கொடுப்பாயென்றெ
மறையவருறைப்பதைக் கண்டான்
கந்தனுந்தாயைக் கண்ணீர் துடைத்தென்ன
காரணம்உரையென விண்டான்.

௫௨. மைந்தனைக்கையால் வாரியெடுத்தாள்
மதிமுகத்தினில் முத்தமிட்டாள்
கந்தனீபிறந்தாலிரதவண்டிக்
காலுக்கென்றதை மொழிந்திட்டாள்.

௫௩. சொன்னதைக்கேட்டான் சுதன்மகிழ்ந்துரைப்பான்
சுரபதிகெனைக்கொடுப்பாயெ
இன்னமும்என்போற் சுதன்பெறுவாயரி
யின்கிருபையாலெ யெந்தாயெ

௫௪. பிறப்பதும்மிறப்பதும் பேருலகோர்க்கே
பெருவினையது தொலையாது
சிறப்புடன்ஹரிபதம் பெறப்பலசென்மத்தில்
செய்தபுண்ணியம் யிதுபோதும்

௫௫. யெத்தனைநாளிருந்தாலுமண்ணுலகில்
செத்திடுவதுபொய்யாது
பத்தர்கள்மனமதில் நித்தமிடுமீசன்
பத்தையடைகுவதே போதும்.



௫௬. தாய்பெற்றிடுவார் தான்முத்திடுவார்
தனையன்பெருங்கதியைத்தாரார்
நீயெனைப்படைக்குமுன்னெடுமால்பதமெனை
நினைத்தாயுனக்கிணையாரார்

௫௭. யென்றுமகனுரைத்த நன்மொழிகேட்டாள்
இருவிழியிலும்புனல் சொரிய
நின்றுகண்மணியெ யென்றுபுகலுமுன்
னேரமாகுதெனப்பெரிய

௫௮. பூசாரடுத்தார் யேசிடத்தொடுத்தார்.
பூவைமகனைக்கையிலெடுத்தாள்
ஸ்ரீசனையடுத்தான் சிறுவனைவிடுத்தாள்
தேரடியிலெவர்ந்து படுத்தான்

௫௯. மைந்தனையிடதுசக் கரத்தினிற்கொடுத்தாள்
வலதுசக்கரத்திற்றான்படுத்தாள்
அந்தணனொடுதாய் தந்தையுமதுகண்டு
அவருமூர்ச்சையாய்ப் ப[illegible].

௬௰. வலதுசக்கரத்தினில் வனிதையும் ஹரியை
வாழ்த்தித்துதித்து வசனிப்பாள்
ஜலஜநயனநின் பாரத்தனை வ[illegible]
சகிதமிதெனப் பஜனிப்பாள்

௬௧. மச்சவுருவெடுத்தாய் மறையினைக்கொடுத்தாய்
மறையவன்மனம் ருசித்திடவெ
அச்சமில்கூர்மவதாரமதாகிய
அமுதமெவரும் புசித்திடவெ

௬௨. ச்வேதவராகமனீதானேபூமியைச்
செஷனையாதரித்தோனெ
வாதுசெயிரணியன் றனைமடியவெ
வந்தனரஹரி யென்போனெ

௬௩. வாமனரூபத்தையெடுத்தாய்பூமியை
வாங்கிமாவலிக்கருள் கொடுத்தாய்
ராமவதாரத்தைப்பிடித்தாய்க்ஷத்ரிய
ராஜர்மணந்தவரை விடுத்தாய்

௬௪. ஸீதாராமவதாரா கௌஸலை
தெசரதராஜகுமாரா
காதகராவணசம்மாரா பல
ராமகலப்பையணி சூரா

௫௫. கோகுலமதிலெபிறந்தாய்பலபல
கோபிகள்புணரச் சிரந்தாய்
நாகத்துவசந்தனனைக்கெடுத்தாய்பாண்டவர்
ராச்சியம்பெறமுடி கொடுத்தாய்

௫௬. கல்கியதெச அவதாரு திருவெங்
கடாசலவாசஸ்ரீங்காராயென்
சொற்கிரங்கிய ருளுவாயெ யெனதிட
துயனைவிலக்கிரக்ஷிப்பாயெ

௫௭. பிள்ளையைக்கொடுத்தாய் பெருமையையடைந்தேன்
பெற்றவயிருங்கொதித்திடவெ
கொள்ளையடிப்பையென்று தெரிந்தாலிப்படிக்
கோருவெனோ சதித்திடவெ

௫௮. அன்றொரு வரங்கொடுத்தாயெ அப்படி
இன்றொரு வரங்கொடுப்பாயெ
என்றும்புகழைப் பெருவாயெ மைந்தனை
யெனக்குக் கொடுத்துரக்ஷிப்பாயே

௫௯. மைந்தனுடனொருன் தானே வுனதிட
மலரடி தனிற்படுத்தேனெ
இந்தரதத்தடியிற்றுவெ யிடவிட
எண்ணலாமொ கனவானெ

௬௦. தேற்தொழில் நடத்துந் திறமுனக்கில்லையோ
தேவாயினமுங்கற் கில்லையோ
பாற்திபன் றனக்குத்தேர்நடத்தியெபரி
பாலனஞ்செய்தவரில்லையோ

௬௧. மடவியருடனெ அடமதுசெய்வது
வழக்கமதுவுனக்குத்தானெ
அடவியிற் பெண்களைத் துகிலைத்திருடிக்கொண்
டலையச்செய்தவனும்னீதானெ

௬௨. ஒருபதுனாருயிரமடவாருடன்
ஓராடியவுந்தன்பேச்சை
அருவைஞன்சொல்லுவதெளிதோபாகவ
தான்சொல்லுவரந்தப்பேச்சை

௬௩. ப்ருகுரிஷி மனைவியைக்கொன்றவனென்றுனைப்
பேருலகோர்சொலப் பெற்றாய்
அகலிகை துரோபதைக் கருள்கொடுத்ததனால்
ஆபத்பாந்துவென்றுற்றாய்



௬௪. படைப்பாய் கொடுப்பாய் கெடுப்பாயுலகைப்
பக்ஷித்துக் குக்ஷியில் விடுப்பாய்
யெடுப்பாய் புவியைப் படுப்பாயாலில்
யெங்குமுன் மயமென அடுப்பாய்

௬௫. யென்மகன் மேலெ யிந்தரதத்தைநீ
யெளிதில் நடத்துவா யரியெ
நின்மகிமை யிந்த நெடுநிலமறியவெ
நிலைக்கச்செய்து அருள் புரியே

௬௬. இப்படி ஹரிதிருப்பொற்பதந்துதித்தாள்
எழில்வெங்கடாசல ஈசன் ஒரு
கற்பனைசெய்தார் கனகரதமதனை
காசினியரியவுல் லாசன்

௬௭. தாசர்கள் பஜனைசெய் கோஷமுஞ்சங்கமும்
தவில்முரசுகள்வை முழங்க
பீசரபேரி நகாரிகள் பூரிகள்
வீணைகின்னரிகள் மத்தளங்கள்

௬௮. நாற்றிசையிலும்பல வாத்தியமுழங்கவெ
ராஜரெவருமொய்த்திடவெ
சூஸ்திரம் பிடித்திழுத்தார்தனைபூசுரர்
அடர்முதுரதம் பின்னிட்டிடவெ

௬௯. காற்றெடுமெழையிடி யாற்றதுபோலொரு
காரணங்கண்டிடக் கொடுத்தார்
சூஸ்திரம் மறையவர்விடுத்தார் ஹரிரதம்
சுதன்மேல் நடத்திடத் தொடுத்தார்

௭௦. மடந்தைதன் மகன்மேல் நடந்தரதத்தையும்
மகிதலத்தோர்களுங்கா ணத்தார்
வடம்பிடி யாமலெ மஹாரதம்வரவெ
மகுத்துவஞ் சொல்லிக்குதிகுதித்தார்

௭௧. கந்தனுமெழுந்தான் காரிகையெழுந்தாள்
கரிவரதனை நமஸ்கரித்தார்
அந்தணராசர்கள் யாவருமறியவெ
அவர்முதுகினிற் குரிதரிதரித்தார்

௭௨. தருமசீலயுந்தனயனும் ஹரியைத்
தியானமெ செய்கிர போது
சிறுவன்றகப்பனையும் பாட்டனும் பாட்டியும்
தேவரெழுப்பினரப்போது

எங. மூவரும் எழுந்தார் தேவனைப்பணிந்தார்
முகுந்தனைப் பலவிதந்துதித்தார்
தாவியெகுமாரனைத் தழுவியெயெடுத்தார்
தாயின்குணத்தையும் சம்மதித்தார்

எச. அங்குளபெரியோரனுக் கிரஹங்கொண்டார்
ஹரிதிருச் சேவையுங்கொண்டார்
மங்கையைப்பணிந்தார் மானகர்வந்தார்
மறையவற்கனங்கொடுத்துண்டார்

எரு. மங்களம் ஸ்ரீவெங்கடாசலமூர்த்திக்கி
மங்களம் மடவிமகனுக்கும்
மங்களம் ஹரிபஜனைகள்செய்பவர்க்கும்
மங்களம்கேட்கும் சற்ஜனர்க்கும்

தேருருட்கதையிதுவே.

---

கசு-வது—விருத்தம்.

திருப்பதி வெங்கடேசத் தேவர்தனிரதவண்டித் ... ... ...
திருப்பெருங் கதையைத் தானெசெழித்தகிர்த்தனமேபாடத் ...
தருப்புகள் தழையநீயெ சத்ததங்கருணைசெய்வாய்... ... ...
அருப்புத மிகுத்தவெற்றி ஐங்கரமுடையதேவே ... ... ...

கஎ-வது—தோடயம்-ராகம்-நாட்டை-ஜம்பை-ரூபகம்.

க. ஜயவேங்கடகிரிநாயகன் ஜயலக்ஷ்மிரமணன் - மிகு
ஜயஹரிகீர்த்தனந் தமிழாற் செய்துஜயம்பெறவெ - ஆ
ஜயமங்கள கௌரீசுதன் ஜயகங்கையின்குமரன் வி
ஜயசங்கரி மருகன்கிருபை செயுமைங்கரன் துணையே.

ஜய - ஜயா.

உ. ஒருபிரம்மணி பெருமையந்தலை
உயர் வேங்கடரமணன் அவர்
வருதேர்வண்டி பெரக்கோரிய வகைகீர்த்தனஞ்சொலவெ - ஆ ஆ
ஹரிகேசவன் திருநாபியஞ் சரசிருஹ மலரோன் - பெரு
திருநாவினி லுறைவாணியெத் தினமுங்கிருபைசெயவெ.

ஜய - ஜயா.

ந. கருமாமுகில்சிரமேவிய வண்ணன்கிருபைக்கண்ணன்
கிரிவேங்கடத் தலமேன்மையைக் கீர்த்தனமாச்சொலவெ
அருள்தங்கிய ஹரியின்கித வாழுமார்கரு டனுமாயின்னம்
ஹரிசேவைசெய் யாழ்வார்கள்தன் னடியுந்துணை செய்யவெ.

ஜய - ஜயா.

---



கஅ-வது-தரு-மங்களம்-ராகம்-சௌராட்டிரம்-தா-ஆதி.

பல்லவி.

ஸ்ரீவேங்கடேசனுக்கு ஜயமங்களம் - எங்கள்
சேஷகிரிவாசனுக்கு - சுபமங்களம்-ஆ-ஆ-ஆ - ஸ்ரீ

அநுபல்லவி.

தேவாதிதேவனுக்குச் செழும்பத்மநாபனுக்கு
மூவர்பரவும் ஆதி மூலமென்பவனுக்கு (ஸ்ரீவேங்க)

க. தாமரைக்கண்ணனுக்கு ஜயமங்களம் - அமுதைத்
தருமுகில் வண்ணனுக்குச் சுபமங்களம்- ஆ-ஆ-ஆ
பூமகள்மருவிய புண்ணியபுருஷனுக்கு
ஸ்வாமி புஷ்கரணியாந் தடம்வாழ் ஹர்ஷனுக்கு (ஸ்ரீ)

உ. ஆதிவராகனுக்குச் செயமங்களம் -ஸ்ரீனி
வாஸ அதிபனுக்குச் சுபமங்களம் - ஆ-ஆ-ஆ
கோதில்கோவிந்தராஜர் கொண்டநாச்சியாருக்கும்
மாது அலர்மேல்மங்கைம்ஞேன்மணிக்கும்-ஸ்ரீ

ந. ஜீயர்திருமொழிக்கு ஜயமங்களம் மஹார்தா
சிஷ்டஅடியாருக்கு சுபமங்களம்-ஆ-ஆ-ஆ
தாயின்மகனைத்தாண்டித் தாவித்தன்னிலமிற்கும்
மாயன்ரதத்தின்பண்டி மகிமைக்கதையிதற்கும் ஸ்ரீ

ச. பக்தியுள்ளவருக்கு ஜயமங்களம் பஜனைப்
பாடிக்கேட்பவருக்கு சுபமங்களம்-ஆ-ஆ-ஆ
சத்தியகிளம்பிகை தன்வாக்குந்தழைக்கவும்
பத்தன்சுப்பராயன்சொல் பஜனைத்தமிழ்செழிக்கவும்

ஸ்ரீவேங்கடேசனுக்கு ஜயமங்களம்.

---

பாயிரம்முற்றுப்பெற்றது.

விருத்தம் - கசு
தருக்கள் - கஅ
ஆ - நக

வேங்கடேசாயமங்களம்.

## வண்டிக்கால்சரித்திரம்.

### க - வது விருத்தம்.

மணிகொண்டசிகரமும் மாளிகைவிசித்திரமும் ... ...*
மகரதோரணவீதியும் ... ... ... ... ... *
மறையவர் தெருக்களும் இறையவர் தெருக்களும் ...*
வைசியர்மற்றுளமனைகளும் ... ... ... ... ... *
அணிகொண்டதேர்வீதி யாவணங்களுமிலகு ... ...*
அன்னசத்திரமளவிலா ... ... ... ... ... *
ஆனைபரிசேனையொடு அரணவித்தாரமிகு ... ... ...*
அழகுசெறிபாகநகரங்... ... ... ... ... *
கணிகொண்டதிருநகரி லொருவேதியன்மனைவி ... ...*
கற்பின்மிகுதருமசீலைக் ... ... ... ... ... *
கர்ப்பமில்லாமலவள் மூப்படைகாண்டளவுமே ... ... ...*
கவலையுடனேவருந்தித் ... ... ... ... ... *
துணிகொண்டதருமமொரு முப்பத்திரண்டையுஞ் ...*
சோர்வுராமற்செய்திடச் ... ... ... ... *
சுரர்பரவுவேங்கடேச் சுரனருட்குருங்கதை ... ... ...*
சொலக்கேட்கமிகுசுகுர்தமே ... ... ... ... *

### (க) தரு-லாவணி-இராகம்-நாதநாமக்ரியை-தாளம்- ஆதி.

பல்லவி.

கேளும்ஸஜ்ஜனர்களே-யெந்த
நாளுந்தருமசீலை யாளுஞ்செய்யறங்களைக் . (கேளும்)

அநுபல்லவி.

வாளோனும் விழிமயி லாளுமனுதினமுங்
கோழிகூவு மந்த வேளைவிழித்தெழுவள். (கேளும்)

சரணங்கள்.

க. பதியெழுந்திடுமது நதிதனை யடுப்பாள்
பணிந்து ப்ராதஸ்நாநமுஞ்செயக் கொடுப்பாள்
ஏதுமினோங் திடிலுமங் கெதிரினிற் படைப்பாள்
இல்லிடை சமையல்செய் யியல்பினை முடிப்பாள்
பதுமனுப னுக்குப் புதுமலரெ டுப்பாள்
பதிகைகொடுத்துச்சாத்திடவகை தொடுப்பாள்



அதிதிகளுடன் பதியுண வனங் கொடுப்பாள்
அன்பன் பரிகலத்தி லவளுமுண் டடுப்பாள் (கேளும்)

உ. புண்ணிய புராண கதைகளில் விசுவாசி
புருடனுடனே மிருது வாகவே பேசி
எண்ணிய பகல்கழித் திடுமெக ராசி
இராவிலரியர்ச்சனைக் கியல்புசெய் தாசி
உண்ணியல முடித்துத்தன் னுடையவன் யோசித்
துளதைநடத்தி யவன் உறங்கப்பின் பாசி
தன்னிற்படுத்துறங்குவாள்மனங் கூசித்
தான்முன னெழுவளரி தியானத்தைப் பெசித் (கேளும்)

ங. கற்பினின்மிகுஅருந் ததியிவள் தானே
கனமிகு பொறுமையிற் பூவிந்தத் தேனெ
பொற்பினின் மிகுயிலக் குமிமட மானே
புகழ்ப்பார்ப் பதியெனப் புகலுவர் தானோ
புற்புதக் குசமுடை யவளறந் தானே
புரிந்துபுருஷனைப்பூ சிப்பள் மெய் தானே
விற்பனர் துதிசெய்யும் மெல்லியை நானோ
விரிதவள் குணம்விளம் பிடத்தெரி யேனே (கேளும்)

---

### (உ) விருத்தம்.

இப்படித்தருமசீலை யினிதுவாழ்ந்திடுநன்னாளில் ... ... ...*
முப்பதுவயதுமாகி முத்தியாமகப்பேறின்றிப் ... ... *
அற்பலதருமமெல்லாம் பதியொடுங்கூடச்செய்த ... ...*
வற்புதமதனையென்று ல்திந்தளவறைகுவேனே ... ... ... *

### (உ) தரு-திபதை-ராகம்-காம்போதி- அட- சாப்பு.

பல்லவி.

க. மைந்தனில்லாமல் வருந்தித்தவஞ்செய்த
மார்க்கமதைக் கேளும் - இந்த
வல்லியுமந்தணனும் புண்யதீர்த்தம்
மகிழ்ந்தாடினர் நாளும்
உ. சிந்தைமகிழத் தெய்வஸ்தலம்யாவும்
தெரிசனஞ் செய்தார்கள் - அவர்
சீருடன் அன்னமும் வஸ்திரம் சொர்ணஞ்
சிறப்புடன்பெய் தார்கள்
ங. வண்ணனை நாவிதனைத் தர்மவேலைக்கு
வைத்துநடத்தினர்கள் - அ

மங்கலிமார்க்குக்கா தோலேயும்சேலேயும்
வைத்துவளர்த்திளர்கள்

௬. தண்ணீரின் பந்தல் மடங்கள் தடங்களுஞ்
சத்திரமும் எடுப்பார் - வருர்
தாபிகட் கெண்ணெயுஞ் சுண்ணமுந் தூரியும்
தர்ப்பணமுங்கொடுப்பார்

௫. ஆருமில்லாத அநாதிப்பிரேதம்
அறிந்தால் சம்ஸ்கரிப்பார் - பசு
வானதூரஞ்சிடக் கல்லுகள் புல்லுகள்
அங்கங்குசேகரிப்பார்

௬. ஊரிற்குழந்தைகள் கோறுஞ்சிற்றுண்டிக
ளுண்டுபண்ணிக்கொடுப்பார் - கண்
ணுமுள்ளோர்க்குக்கண் காணமருந்துக
ளுச்சிதமாய்க்கொடுப்பார்

௭. தன்மவயித்தியஞ் சிறைச்சோறுங்கன்னிகை
தானங்களுங்கொடுப்பார் - பிறர்
தந்துயர் நீக்கியே ஷண்மதத்தார்க்கன்னந்
தாமேஉண்ணவிடுப்பார்

௮. துன்பதியோர்பிடித் தாட்டும்உயிரைத்
துலேயில விடச்செய்யுவார் - இந்தத்
தொல்லுலகோர்க்குக் குழந்தைக்கிப்பாலுஞ்
சுடுகக்கொடுத்துய்யுவார்

௯. பிள்ளையுண்டாகிப் பெருமடவாளைப்
பிரியமுடனுதரிப்பார் - ஏழைப்
பிள்ளைகளைவளர்த்துள்ளம்மகிழப்
பிசகாமலாதரிப்பார்

௧௦. வள்ளலெனும் வேங்கடாசலமூர்த்தி
மலரடிக்கன்புடையார் - இந்த
மண்டலந்தன்னிலே யில்லரமார்க்கம்
வழுவாதகன்னடையார்

---

(௩) விருத்தம்.

சொல்லியதருமமல்லால் ஞோட்சதானமின்னும்... ... ... ...*
பல்பலவிரதம்பூண்டு பரிவொடுமுடித்துவாழும்... ... ...*
அல்லியங்குழலியாட்கே அநுக்கிரஹம்செய்யவெண்ணிச் ... ...*
செல்லியல்வேங்கடேசன் செழுமறையவர்போல்வந்தார் ... ...*



(௧) கொச்சகம் - யமுகம்.

அன்னந்தடை கரனே ஆதுலனுய் வந்தவர்க்கு ... ... *
அன்னந்தடை யின்றி அளிப்பாயென் றந்தணர்சொல் ... *
அன்னந்தடை நடையா ளரிந்தடிசில் புரிந்துடனே ... ... *
அன்னந்தடை யிவருக் ககமகிழத் தந்தாளே... ... ... *

(௨) விருத்தம்.

அருமறை யவனுக்கன்று ளன்னமே நல்கும்போது ... ...*
தருமசீலேயைப் பார்த்துந்தன் றனையனு மெங்கேயென்றார் *
குறையதுவல்லால் வேறு குறையிலே யென்றளப்போ ... *
மறையவன் புஜிக்கேனென்று மறுத்திவை யுரைக்கலுற்றான் *

(௩) தரு-இராகம்-ஆரபி தாளம்-ஆதி.

கண்ணிகள்.

௧. மைந்தனில்லா மனையில் மறையோர்புஜிக்கமாட்டார்
மங்கையே யென்று சொன்னார் அந்தச்
சந்திரமுகி கேட்டுத் தாமரைச் சலம்போலே
தயங்கித் தவித்து நின்றாள்

௨. தந்தேன் தண்டுலமிதைச் சமைத்துப்புஜித்திடுவீர்
சுவாமிநீரொன் றுரைத்தாள்
சுந்தனில்லாதவர்கள் தந்தாலெதுவும் நாங்
கைக்கொள்ளோமென் றுரைத்தார்

௩. ஏதும்வேண்டா மென்றீரோ எளியாளுக் கொருகதி
யியம்பெனப் பணிந்தாளே
தீதில்லாத சொர்க்கம் சேயில்லார்க் கில்லேயென்றார்
தேன்மொழி தணிந்தாளே

௪. புத்தெனும் நரகத்தைப் புல்லுவர் மகவில்லாப்
பூவையரத் னுலே ஒரு
தத்துமக னெனிலும் பெற்றால் நரகமில்லேத்
தையலே யதன் மேலே

௫. நீதருந்தானத்தை வேதியர் கொள்வது
நீதம் அவர்க்குத் தானே
ஏதுஞ்சஞ் சலம் வேண்டாம் ஸ்ரீதரனைப்பணிவாய்
ஈகுவர் சுதன் றானே

௪. என்றுசொல்லியே மறையாளன் சென்றபின்பு
யேந்திழை துயர் கதித்தாள்
நின்றெரி தழலுக்கு நெய்போலந்தணன்சொன்ன
நேர்மை நினைந்து கொதித்தாள்

(௩) விருத்தம்.

பொறுமையிற் பூமிக்கொப்பாள் புருடனன்மொழியைத்தப்பாள் ... *
தருமசீலையு மப்போது சஞ்சலக் கடலில்மூழ்கிச் ... ... ... *
சிறுவனில்லாமற்றுனே சிந்தையுங் கலங்கிவாடி ... ... ... ... *
அரிதிரு வேங்கடேச ரடிதொழு தியம்புவாளே ... ... ... *

(௪) தரு-இராகம்-முகாரி-தாளம்-அடதாளச்சாப்பு.

பல்லவி.

என்னஜன்மங் கொடுத்தாய் - ஹரிஹரி
இப்படியேன் விடுத்தாய்

அனுபல்லவி.

பன்னகமீதிற் றுயிலுமுனைத்துதி பண்ணுமற்போனேனோ - இந்தப்
பாரினிற் பிள்ளையில் லாதவளென்று பலர்சொல்லுக் கானேனே-எனக் (கெ)

சரணங்கள்.

௧. மக்கண்மெய் தீண்டிலுடற்கின்பமென்று
வழங்கு மதனாலே மழலையஞ்
சொற்கேட்கி லின்பஞ்செவிக்கென்றுவேதமுஞ்
சொல்லும்புவி மேலே எனக் (கென்னஜன்மம்)

௨. அன்னத்தையுண்டு அலங்கிருதங்கொண்டு
அழகிற்சிறந்தேனே யென்ன
அன்னையெனுஞ்சுதன் றன்னைப்பெறாதவள்
ஆகிப்பிறந்தேனே யெனக் (கென்னஜன்)

௩. மைந்தன் பெறா வுதாந்தனைக் கொண்டது
வாளுட் பெருஞ்சுமையே இந்த
மாவளப் பூமியிற் கோவலைப்பூச்சிக்கு
வாய்த்த விளைச்சலையே யெனக் (கென்னஜன்ம)

௪. புத்திரனைப்பெற் றெடுக்காத காமுங்
கசடர் பெருங் காமே இந்தக்
காசினி தன்னிலே ஆட்டின்கழுத்திலே
காணுங் களஸ்திரமே எனக் (கென்னஜன்மம்)



௫. பாலனைப்பெற்றதைப் பார்த்துமகிழாத
பாவிகண்ணின் றுணையே இந்தப்
பாரில்மாபிறச்சிறை தோறும் நிறைந்து
பரவுங்க [illegible] யெனக் (கென்னஜன்மம்)

௬. பிள்ளைசொற் கேளாத வள்ளைச்செவித்துளை
யுள்ள துடற்கணிமே இந்தப்
பேருலகந்தனிற் சீறெலிதோண்டும்
பெருந்துளைக்கொப்பினமே எனக் (கென்னஜன்மம்)

௭. பாலகனில்லாத பாழுஞ்சரீரம்
படைத்தல் பழவினையே - பூமி
பாரமாய்க் கள்ளி மரமும்வளர்ந்து
பழுக்காத பாவனையே யெனக் (கென்னஜென்)

௮. மக்களில்லாத மனைக்குட்பெருஞ்செல்வம்
வாய்த்திருந்தென்ன பலம் - தெய்வம்
மாத்திர மில்லாத க்ஷேத்திரக் கோயில்
வளர்ந்திருந் தென்ன நலம் யெனக் (கென்னஜென்)

௯. பெண்ணாய்ப் பிறந்திந்த மண்ணினில் யாரும்
பிழைசொல்லப் பெற்றேனே - மலர்
கண்ணுவனைப்பணிந் [illegible]
கருணைமிகுத்தோனே [illegible] யெனக் (கென்னஜன்)

௧௦. அச்சுதா [illegible]

[illegible] ... ... ... *

[illegible] ... ... ... *

[illegible] வங்கடேச ... ... ... *

சந்தத தரு— [illegible] பறுவரள் போற்றுவாளே ... ... *

(௫) தரு - ராகம் - செஞ்சுருட்டி - தா - ரூபகசாப்பு.

பல்லவி.

மைந்தன்பெற வரம் நீ தருவாயே திரு
வளர்வேங்கட கிரிமீதினில் வாழும்ஹரிநீயே ஒரு—(மைந்த)

அனுபல்லவி.

உந்தனையே வந்தனைசெயு மெந்தனுதரந்தனிலோரு (மைந்த)

சரணங்கள்.

௧. தேவாவுனை நம்பினேன் பத்மநாபா - கஞ்சப்
பூவாள்மருவிய கௌஸ்துபமார்பா

பூவையர்க்குள்ளே பாவியென்றென்னை
யேவிடாமலே தேவனீயொரு (மைந்தன்)

௨. மறையோர்க்கன்னந்தரத் தாவிக்கிறாரோ - உற
முறையோர் பலபல பா[illegible]ஷிக்கிறாரோ
தனாமீதிந்தக்குறை தீர்த்தருள் புரிவசூரி
ஊரியேயொரு (மைந்தன்)

௩. பெற்றாரைச் சொர்க்கத்தாரென்கி றாரோ - பிள்ளை
யற்றாரைப் பவத்தா[illegible]ரென்கிறாரே
புத்தாம்நரகத்தாள்வதை
யற்றாளெனவுற்றார் சொல்ல (மைந்தன்)

௪. யெந்தன் குறை யது தீர்த்தரு[illegible]ளையா - வுனைச்
சந்தானகோபாலனென்பது பொய்யா
எந்தன்குலமுந்தழைத்திட
வுந்தன்பெயர் தந்தழைத்திட (மைந்தன்)

௫. மாயா அன்பர் தமைக்காக்குஞ் சகாயா - கனி
வாயா திரு வளர்வேங்கட[illegible]ராயா
சேயாகிவந் தாயர்க்கருள்
தாயா வெனைத் தாயென்றிட (மைந்தன்)

(எ) விருத்தம்.

மைந்தனைப்[illegible]றென்று மகிதலஞ்சே[illegible]ன்றெல்லப்போதுங் *
கந்தனையுந்[illegible]டிக் காலுக்குக்கொ[illegible]ப்பெனென்று ... *
சிந்தையில்[illegible]ளந்தத் தேன்[illegible] [illegible]மன் ... *
நந்தரிமுகு ... *

(அ) தரு

௧. கற்புடையாள் கணவ[illegible]
காரணத்தைச்சொல்லுகிறேன் கா[illegible] தேரும்
விற்பனனு மவள்கொழுனன் வேண்டினதும் நன்றும்
மெய்ப்புதல்வன் றனடையிற் பொற்புதல்வன் என்றான்

௨. பத்தினியாள் மாமிசொன்ன பிரார்த்தனையைக் கேளும்
பரிந்துதொட்டிற் குழலிதரப் பகர்ந்திருந்தாள் நாளும்
உத்தமமவள் கொழுனன் உரைத்ததும் விசித்திரம்
உண்பதின்றி யாத்திரையிற் றின்பதாய்விம்ப பத்திரம்

௩. இந்தவிதமாகவவர் சிந்தனைசெய் திருந்தார்
இத்தனையும் வேங்கடேசன் சித்தமதிற் றெரிந்தார்
கந்தனை வண்டியற [illegible] காரிகைதான் கோரும்
கருத்தறிவோ மெனஹரியங்கருணைசெய்தார் பாரும்



(அ) விருத்தம்.

[illegible]ருணைசேர்வெங்கடேசன் காரணமெவருங்காணத் ... ... *
[illegible]ருசீலையின்கரே சபதமுமறிவோமென்று ... ... ... *
[illegible]ரியருள்கொடுத்தாரப்போ தருவையுங்கற்பமானாள் ... ... *
[illegible]தரியவேகருப்பசின்னை தெரிந்தளவியம்புவேனே ... *

(ஏ) தரு - ராகம் - கலியாணி - அடாதளச்சாப்பு.

பல்லவி

கெற்பம்படைத்தனளே - தருமசீலை
கெற்பம்படைத்தனளே

அனுபல்லவி.

கெற்பம்படைத்தன ளற்புதமாகிய
சற்பனிரீசன்செய் கற்பனையாகிய (கெற்பம்)

சரணங்கள்.

௧. பூத்துநீராடினளே கணவனைப் புல்லிக்கொண்டாடினளே
பாத்தொருமாதம் பகவானருளென்று
காத்திரமேதோ கனப்[illegible]ன்றென்று
கீர்த்திமருவிய வெங்கடாசல மூர்த்தியருளெனத்
தோத்திரஞ்செய்து நாத்திரஙடயர் சாத்திரம்
வெகுனேத்தியிதுமணப் பூர்த்தியெனச்சொல்லக் (கெற்பம்)

௨. மாதமிரண்டாச்சுதென்பார் அவளுண்ணுஞ்
சாதம் மட்டாச்சுதென்பார்
கோதில்பலபக்ஷணங்களூட்டினார்
ஆதரவாய்ரத்ன ஹாரங்கள்பூட்டுவார்
சீதமதிமுகமும்வெளுத்திட மாதமூன்றென
மாதர்வழுத்திடத்தாதிமாதொடு சூதமாடியே
போதுபோக்குவள் மாதம்நாலிலே (கெற்பம்)

௩. திங்களைந்தானதுவெ வயிற்றீற
சிசவுருப்பானதுவெ
மங்கையர்மங்கள மாமலர்சூட்டியெ
வாகுள்ளகாப்பு வளைகள்கைக்கூட்டியெ
திங்களாறிலெ துங்க வேதியர் தங்கள் வேதமு[illegible]
ழங்கப்புஞ்சவனங்கள் சீமந்தங்களிம்மட
மங்கையர்க்கு நலங்சொனர்ச்செய் (கெற்பம்)

௪. சப்தமாசம்வரவே சிசுவும் சகலரூபம்பெறவெ
மைத்தயெட்டொன்பது மாசம்வளரவெ
வரும்பத்துமாசத்தில் மங்கைதளரவெ
கற்தனுகியவெங்கடாசல உத்தமன்கிருபைபெத்து
இவள்முப்பத்துவயதினை யுற்றமேலொரு
புத்திரன்றனைப் பெற்றெடுக்கவெ (செற்பம்)

(௭) விருத்தம்.

மாதமோர்பத்துஞ்சென்று மடக்கொடியின்வயிற்றிற்பாலன் ... *
ஆதரவுடன்வளர்ந்து அவனியிற்செனிக்கவேசான் ... *
வேதனைமிகவுண்டாகி மெல்லியர்மயங்கியோடித் ... ... *
தாதிமாருடனெஞ்சொல்லித் தயங்குவாள்மயங்குவாளே ... *

(௮) தரு - இராகம் - புன்னாகவராளி - தாளம் - ஆதி.

பல்லவி.

அம்மம்மாயினி யென்னசெய்வேனடி
இந்தவேதனைக்குனன் அம்மம்மாயினி

அநுபல்லவி.

அம்மம்மா பெண்ஜென்மம்பாவி
பிரம்மன்படைத்த வன்ம மிதுவோ (அம்மம்மா)

௧. மாதெயிதுகன வானத்தெரிந்தேனடி இதுவனாயில்சதன் (பெறும்)
மாதரழுவதைச் சூதென்றிருந்தேனடி
யேதுனனிது போதயென்றுய ரேதவேமுடியாது
பிரசவவேதையிது வெனவேதெரிந்தால்
நாதனிடமொரு போதுமருவேன் (அம்மம்மா)

௨. சற்றெயாகிலுஞ் சகிக்கவசமில்லையெ யென்தாதிமார்களே
யெத்தனைமீதிலும் யசிக்கரசமில்லையெ
எத்தனைனேரஞ் செல்லுமோசதிருப்பிள்ளை
சொல்லுமோஅத்தைநீ கிசஞ்சொல்லடி
பெத்துனன் காண்பதல்லடி (அம்மம்மா)

௩. ஆரைச்சதித்தனி யாயஞ்செய்தனோ அரிஅரியென்றேதிதுப்
போனைத்தாதனைப் புரிந்துவைதேனோ
ஆரணன்அகண்டபரி பூரணன்வேங்கடகிரி
நாரணனையரி துரஞ்செய்வதேனோ அரி (அம்மம்மா)



(௯) விருத்தம்.

அருமையிலையுமப்போது தனையனைப்பெறுவதற்குப் ... ... *
பிரசவவேதனைபொறும்ற பாக்கியரோடிச்சென்று ... ... *
பிரியமுடன்மருத்துவத்துப் பெரியவள்தன்னைக்கூவக் ... *
கருசனமாக வந்தக் காரிகைதான்வந்தாளே ... ... ... *

(௧௦) தரு - ராகம் - சவுராஷ்ட்டிரம் - அடதாளச்சாப்பு.

பல்லவி.

மருத்துவக்கிழவிவந்தாளே அந்த
மாதுபடுந்துயரேதென்றுகூளெ (மருத்துவ)

அநுபல்லவி.

௧. வருத்தமுடனெனடந்தோடியிங்கெ
மாச்சப்படுவாள்கிட்ட வந்துறையாடி
மருத்துவஞ்செய்வெனென்றுடி முலை
வளர்ந்துதுடையில் விழுவதுடன்போராடி (மருத்துவ)

௨. நரைத்ததலையும் நமெரிச்சக்கையில்
நழுவுஞ்சேலையிடையில் நடுக்கிக்கொண்டுக்க
இறைக்குமிருமு முக்குமெடுக்கப் புகை
யிலைச்சருட்குடிநுத்த மெவளாயும்முடுக்க (மருத்துவ)

௩. கையிற்றடியொன் றெடுத்தாணிவாயிற்
கடித்தபுகையிலையோர் காத்தினிம்பூணி
மெய்யுள்வளைந்திடு முக்கோணி - பிள்ளை
வேதைமிலுஞ்சிரிக்க விலமுப்பனகொக்காணி (மருத்துவ)

௪. பதறுதேநீயென்று அடுப்பாள் தொட்டுப்
பார்க்கிரேனிதுயென்று பாவையைத்தடுப்பாள்
அதுக்குள்ளொருவசனந் தொடுப்பாள் இது
ஆண்பிள்ளையென்றுதன் அரைச்சீலையுடுப்பாள் (மருத்)

௫. இனிநீபயப்படாதெயென்பாள் வெத்
திலைபாக்குக்கிரும்பெல்லாம் யிவட்குமுன்தின்பாள்
வனமூலிகையிது பாரென்பாள் அந்த
வரதவெங்குடேசனை வாழ்த்துநீயென்பாள் (மருத்)

(கக) விருத்தம்.

மருத்துவக்கிழவிவந்து மங்கையைத்தேற்றும்போது ... *
பொறுத்திடமாட்டேனென்று பூவையும்புலம்பாச்சி ... *
சிரித்துடன்கணவனோடு சேர்ந்தசெப்படிநீயென்றாள் ... *
கருப்புடையவள்சிரிக்கக் கடினமாய்நொந்ததன்றே ... *

(க0) தரு - ராகம் - செஞ்சுருட்டி - தாளம் - ரூபகசாப்பு.

பல்லவி.

வயிர்வலிக்குதுதாயே செய்யும்
வகையைநீசொல்லுவாயே - வயிர்வலிக்குது.

அநுபல்லவி.

துயர்விலக்கவந்தாயே நீயே
துணையென்னைரக்ஷிப்பாயே (அடிவயிர்வலிக்குது)

க. மருந்திருக்குதென்றாயே அதை
மகிழ்ந்துநீ கொடுப்பாயே
சரிந்தயெந்த னுதரந்தனிலொரு
பருந்துபோற்சுழன் றிருந்திருந்தடி (வயிர்)

உ. இடைகடுக்குதுஅம்மா கண்ணுக்
கிருட்கொடுக்குது சும்மா
நடைதடுக்குது தொடை கடுக்குது
படபடக்குது கிடுகிடுக்குது (வயிர்)

௩. இனிபொறுக்கமாட்டேனே இதற்கு
யென்னசெய்குவேன் நானே
வனஜனயனன் பன்னகசயனன்
றனதுமனதும் பனமொயென்று (வயிர்)

(உ0) விருத்தம் யமகம்.

தனஞ்செயனிரதம்வாய்ந்த சாரதிதனைத்தியானிக்குந் ... *
தனஞ்செயக்குன்றுளான தையல்மேற்கருணைசெய்து ... *
தானஞ்சையாற்றந்தபாலன் றானியிற்பிறக்கவெண்ணத் ... *
தனஞ்செயனுதைக்கப்பிள்ளை சலத்துடன்பிறந்ததன்றே ... *





(உக) தரு - ராகம் - கரகரப்பிரியம் - அடதாளசாப்பு.

கண்ணி.

நாமகரணம்விதித்தார் - வேங்கட
ரமணனென்றே துதித்தார்
பிராமணர்க்கனங்கொடுத்தார் தக்ஷிணை
பரிந்துகொடுக்கத் தொடுத்தார்.

(உஉ) விருத்தம்.

வட்டிணைமுலையாள் இஷ்டமாமகனை ... *
மட்டிலாவிலைகொள் தொட்டிலிட்டனளே ... *

(உங) தரு - ராகம் - தோடி - அடதாளசாப்பு.

பல்லவி.

தொட்டிலிட்டவள்பாடினாள் - பாலகன்றன்னைக்
கட்டிமுத்தமிட் டாடினாள்

அநுபல்லவி.

அஷ்டலக்ஷ்மியொத்த - இஷ்டமங்கையர்சுத்தக்
கட்டிப்பொன்னிற்சமைத்த மட்டில்லாவழகுற்ற (தொ)

க. பாலனுக்கலங்கரித்தாள் - அனேகபுஷ்
பங்களைச் சேகரித்தாள்
ஆலமமுதமெனும் வேலார்விழியர்கூடிக்
கோலாகலமாகவெ நாலாவிதமும்பாடி (தொட்டி)

உ. மங்கையர்பலர் கூடினார்ஜோஜோவென்று
மகிழ்ந்துமிகவும் பாடினார்
குங்குமமுங்களபங்களும் வழங்கினார்
சங்கீதமேளங்கள் சகலமுமுழங்கின (தொட்டி)

௩. முத்தினாரத்தியெடுத்தார் திஷ்டிசுத்தியே
முன்றில்தனிலெ விடுத்தார்
கர்த்தன்வேங்கடகிரி கமலனுபமுராரி
பத்தர்க்கருளும்வாரி பரமாத்துமாவெக்கோரித் (தொட்)

லாவி.

(க௩) தரு - ராகம் - ஆனந்தபைரவி - சாப்புதாளம்.

க. லாலிவெங்கடநாயகா ஸ்ரீஹரி
லாலிமங்களநாயகா
லாலிபக்த சகாயகா ஹரிஹரி
லாலிகமலா ஞயகா

உ. பந்திரவரமேகொடுத்தாய் சமர்துளுல்
பெற்றிடவும்நீ விடுத்தாய்
உத்தமனே யெனஞாருகவி வருமசனா
நித்தியமும் நீயெரகதி (லாலி)

௩. ஆலிலையிற் றுயிலுவாயே அலைமொரு
காலிலெயளந்த நீயெ
குலிலெவளர்த்த சேயே யெனதழுலைப்
பாலிலெவளர்த்து வாயே (லாலி)

௪. தாசர்களுக் லாசன்னியே வைகுண்ட
வாசஸ்ரீஷி கேசன்நீயே
சேஷகிரி வாசன்நீயே பக்தவிச
வாஸ்ஸ்ரீனி வாஸன்னியே (லாலி)

(கச) விருத்தம்.

பத்தினி கருமிலே பாலனுக்கென்னைவார்த்து ... ... ௵
மெத்தவே முலைப்பாலூட்டி வெதுப்புநீர் முழுக்குமாட்டி ௵
நித்திய மலங்கரித்து னேர்மையாய் வளர்தாளப்போ ... ௵
பத்துமாதமு மேயாகப் பாவைபோர் கனவுகண்டாள் ... ௵

(கரு) விருத்தம்.

மைந்தனைப்பெற்றுனுக்கோர் வண்டியிற்கொடுப்பேனென்று ௵
தெந்தனமாகவேண்டிச் சிறுவனைப்பெற்றேமென்றுஞ் ... ௵
சிக்கையுமகிழ்ந்தாயிப்போ திங்களோர்பத்துமாக ... ௵
வந்துவற்பிசமாசத்தேர் வண்டியிற்கொடுப்பாய்பெண்ணே ௵

(கசு) விருத்தம்.

என்றுவேங்கடகிரீசன் இயம்பநித்திரைதெளிந்தாள் ... ௵
கன்றிறுன்வயிற்றைக்கையாற் கசக்கிறும்கரைந்துவாடி ... ௵
நின்றுதன்மனைக்கண்டு கெக்குகெக்குருகிளுைக்கு ... ௵
பின்பினிச்செய்வதென்னென் றேம்பினாள்தேம்பினளே. ... ௵





(கச) தரு - ராகம் - காம்போதி - அடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

க. சொப்பனங்கண்டு துயில்தெளிந்தாள். நின்று
சோம்பினள் இந்தத்
துஷ்டசெய்வர்தனை யிஷ்டஞ்செய்தே னென்று
தேம்பினள்

உ. இப்படிச்சொப்பனஞ் செப்பிவிடா னென்று
எண்ணினள் இனி
எப்படியப்பனை யொப்பிப்பதென் றழுங்
கண்ணினள்

௩. ஙம்பாகவேண்டி வகைமோசம்போனே னென்
றழுதாள் எனக்
குன்பாதமேதுணை உண்டென்றரியை ச்சை
தொழுதாள்

௪. தும்புருநாரத ரும்பர வுஞ்
சுரேசனே இந்தத்
துஷ்டக்கோரிக் கையை
விட்டெனையாளுஞ் சர்வே சனே

௫. பேதமை யென்பது மாதர்
கனிகல னல்லவோ அழும
பெண்ணைக்கண்டா லெந்தப்
பேயுமிரங்குமே [illegible] யல்லவோ

௬. காதலாய் வேண்டினேன் பாதகஞ் செய்யக்
கருத்துண்டோ பிள்ளைக்
காணிக்கைக் காதால்
லாணிப்பொன் பிள்ளைக் கொறைப் புண்டோ

௭. பிள்ளைகொடுத் தென்னைக் கொள்ளையடிப்பது
தர்மமோ இந்தப்
பேதைக் கிரங்கியெ
பாதுகாப்பனென வர்மமோ

அ. கள்ளனைத்தேள் கொட்டுங் கொள்கைபோலானனே
கர்த்தனே யென்னைக்
காருந் திருப்பதி
காரணமுற்றிப்ர சித்தனே

(கஎ) விருத்தம்.

கனவில்வந்தரியுஞ்சொன்ன காரணமதனைப்பேதன் ௵
னினைத்தொடுசொன்னலப்போதெவர்களுர்வைவரென்று... ௵
வனிதையும்ஹரியைப்போற்றி வகதளஞ்செய்துவந்தாள் ... ௵
கனமுளவற்பிசத்தேர் கட்டதமின்றிடக்கொண்டாளே ... ௵

(கங) தரு - ராகம் - முகாரி - அடதாளசாப்பு.

கண்ணிகள்.

க. கனவுநாடது நினைவுதானென்று
கவலைவிடுத்தாளே - பெற்ற
கந்தனைக்கண்டு தரிசனங்கொண்டு
களிப்பொடெடுத்தாளே

உ. மையிட்டுப்பொட்டிட்டு வாரிமுடிந்து
மகனைமுத்தமிடுவாள் - பின்பு
வாஞ்சையுடன் ரத்னக் - காஞ்சனபூஷணம்
மைந்தன்புகழுத் திடுவாள்

ந. காலுக்குத்தண்டை கொலுசுஞ்சதங்கை
களத்தியிடைக்கிடுவாள் - கந்தன்
மேலுக்குமேயுள்ள சாலுவைபோர்த்து
விரல்க்கணியு மிடுவாள்

ச. முத்துக்கடுக்கனும் ரத்தினத்தொங்கல்
முருகுஞ்செவிக்கிடுவாள் நெற்றி
முப்பிறைச்சுட்டியும் பற்பலபூஷணம்
முற்றும் நிறைத்திடுவாள்

ரு. ரூபதின்மேலெந்தன் கெற்பத்தில்வந்தனன்
ரூத்தென்னவேயெண்ணுறு [illegible]
முப்பழம்சர்க்கரை யப்பமுந்தேனும்
முலையங்கொடுத் தூண்ணுவாள்

சு. பாலன்விளையாடுஞ் சீலத்தைக்கண்டு
புகர்கனவை மறந்தாள் ஹரி
பார்போமிவனிட தாத்பரியமென்று
பதராமலே யிருந்தார்

(கச) விருத்தம்.

மைந்தன்சொல்மழலைவார்த்தை மடந்தையுங்கேட்டுளித்த[illegible]
சிந்தையும்மகிழ்ந்தாள்மாயன் செப்புசொப்பனமறந்தாள் ...
ஐந்துவற்சரம்பொருந்தா ரப்புரம்ஹரியும்பார்த்துக் ...
கந்தனுக்குதாலியாதி கற்பித்தார்மெய்ப்பித்தாரே ... ...

(கரு) தரு - ராகம் - சங்கராபரணம் - தாளம் - ஆதி.

நொண்டித்தரு கண்ணிகள்.

க. அம்மாவெனக் கேதோ வயிர்வலி
யாகுதென்று உயிர் போகுதென்றான்
யெம்மால்முடியாது என்னை நீ
யெடுப்பையென்றான் கீழே விடப்பையென்றான்



உ. படுப்பானெழுந் திருப்பான் அவன்வெகு
பாடுப்படுவான் கூப் பாடுமிடுவான்
ஒடுப்பான் முகங்கடுப்பான் அடிக்கடி
உனுங்கிடுவான் மினு மினுங்கிடுவான்

ந. பெருங்குர லிட்டழுவான் பலபல
பிதற்றிடுவான் பதை பதைத்திடுவான்
மருங்கைப் பிடியுமென்பான் இங்கெ
வயிற்றிலென்பான் றன்னி தயத்திலென்பான்

ச. பசிக்குதென்றே யழுவான் பால்தயிர்
பருகான் அன்னமும் பெருகானே
இசிக்குது நரம்பென்பான் இனிபிழைப்
பில்லையென்பா னுன்பிள்ளை யல்லயென்பான்

ரு. கசக்கிவயிற்றைப் பிசைவான் வாய்விட்டுக்
கதருவன் கால்களை யுதருவனே
வசைக்கிப் பிறந்தேனென்பான் உடல்தன்னை
வளைத்திடுவான் பின்னும் களைத்திடுவான்

தனநா த்தனதனநா

(கசு) விருத்தம்.

நோயிதுபெரியக்கேமென்று நுவன்றழுபாலன்றன்னைத் ... *
தாயெடுத்தணைத்துமோந்து தடவியெதன்னாலான ... *
காயமுஞ்சுக்கிற்காய கஷாயமுங்கொடுத்தாள்சும்மா ... *
மாயனார்மருந்தல்லாது வாங்குமோவயிற்றுநோவு ... *

(கஎ) தரு - ராகம் - சங்கராபரணம் - தாளம் - ஆதி.

நொண்டிதரு கண்ணிகள்.

க. அன்னையுந்தகப்பனுமே - பாட்டனும்
அறிந்தாரவர்பொரி பொரிந்தாரே
நன்னயமாகவுமே - வைத்தியரை
நாடியழைத்தார்வந்து கூடிவழைத்தார்

உ. அவுஷதங் கொடுக்கலுற்றார் - சுக்குத்திப்பிலி
அரைத்தமிளகிம தூரத்துடனே
எவளவோசரக்குவகை - ஆதுவளை
யித்துடன்கண்டங்கத்திரி தூத்தியுடனே

ந. கற்கங்கஷாயங்களும் - லெகியங்
கணக்கில்லாமற்கொடுத்த ரிணக்கமில்லே
வைக்குஞ்செந்தூரங்களும் - பஸ்மங்கள்
மாத்திரையுங்கொடுத்துப் பார்த்திடவே

கா

௪. குணமில்லையெனத்தெளிந்தார் - இனியிதிற்
குணமில்லையெனவவர் முணகிக்கொண்டே
பணமிகப்பறித்துக்கொண்டார் - இதுவென்னமோ
பாவமென்றார்விரகத்தின் கோவமென்றார்

௫. வயித்தியர்களுமகன்றார் - சோதிட
மறையவர்களையழைத் துரையுமென்றார்
வியத்தினிற்குருவென்றார் - அஷ்டம
வீட்டிற்சனியிருந்து ஆட்டுதென்றார்

௬. ரோகாதிபன்பெலத்தான் - இதிர்குஜசி
ரோகமென்பார்பின்பு ___ யோகமென்பார்
ஆகாத்திசையிதென்பார் - வருஷமோர்
ஆருக்குமேற்பட நூருக்கென்பார்

௭. நவக்கிரஹஜபஞ்செய்வார் - நக்ஷத்திர
நாமஞ்செய்வார்ஜப ஹோமஞ்செய்வார்
அபமிருத்துசாந்திசெய்வார் - சூரியநமஸ்
காரஞ்செய்வார்பரி ஹாரஞ்செய்வார்

௮. மறையவர்களுபத்தினிலெ - வயிர்வலி
வாஸ்ரபலக்குநு குறைவில்லையெ
இறையவன்செயலென்றார் - இதுயினி
யெங்களால்முடியாது வெங்கடகிரி

௯. ஹரிதனைக்கோருமென்றார் - முன்றலெ
அவர்அனுக்கிரஹத்தி லற்பவமாகவே
சிறுவன்செனித்ததென்றார் - தாய்தந்தை
தெரிந்தார்வேண்டினை தரிந்தாரே

தனனு த்தன தனனு.

(௨௦) விருத்தம்.

வெங்கடேசனைநம்வேண்டி மெத்தவும்மறந்ததாலே ... *
சங்கடவயிற்றனேவு தனையனைவருந்துதென்று ... *
துங்கமாயரிக்கிச்சொன்ன சொற்படிசேகரித்து ... *
அங்கவர்திருப்பதிக்கு யாத்திரைபுறப்பட்டாரே ... *

(௬) கரு - ராகம் - மேஹனம் - அட்டாளச்சாப்பு.

பல்லவி.

யாத்திரைசெயவெழுந்தார் - திருப்பதி
யாத்திரைசெயவெழுந்தார்



அனுபல்லவி.

கீர்த்திமருவும்வேங்கடாத்திரிஹரியேவுந்தன்
பிரார்த்தனைமறந்தோமேன் றுத்திரமாகவெ (யாத்திரை)

சரணங்கள்.

௧. கணவன்பொற்பதுமைசெய்தான் - தொட்டிலுஞ்சேயும்
கையில்மாமியும்வைத் தெய்தான்
க்ஷணத்தில்வேப்பிலைனன்றாய் மணக்கத்தின்குரவனுங்
குணத்திதருமசிலை * குசப்பாலுங்குரவனும் (யாத்திரை)

௨. மறையோருண்டிடவிடுத்தார் - யாத்திராதானம்
மழைபொழிந்தெனக் கொடுத்தார்
விளாவாயெழுந்துகூடி - வேண்டும்பொருளைத்தேடி
ஹரிஹரியெனப்பாடி யானந்தமுடனாடி (யாத்திரை)

௩. பத்திமிகவுங்கொண்டாரெ - கோவிந்தராஜர்
பட்டணமதைக் கண்டாரெ
அத்தலத்திலிருந்து - ஹரியர்ச்சனைபுரிந்து
சப்தகிரியைக்கண்டு தாமெதுதித்துக்கொண்டு. (யாத்திரை)

(௨௧) விருத்தம் - ஸ்தலவிசேஷம்.

ஸ்ரீவேங்கடாத்திரித் திருப்பதித்தலமகிமை ... ... *
செப்பவெளிதோ சிறியவன் ... ... *
தினகரன்முன்மின்மினி திரிந்ததெனயானிது ... ... *
தெரிந்தமட் டுரைசெய்குவேன் ... ... *
தேவர்கள்வணங்கிடுங் கோவிந்தராஜரும் ... ... *
ஸ்ரீபூமி தேவியாரும் ... ... *
தேடிஹரிவைத்திடுஞ் சூடிசுருளுக்கியும் ... ... *
ஸ்ரீராம லட்சுமணருங் ... ... *
கோபுரப்பிராகார கோயிலின்விசாலமுங் ... ... *
கோசாய் மடத்தினழகுங் ... ... *
கோதில்வேதியர்நானு சாதியர்தெருக்களுங் ... ... *
குறைவிலா நந்தவனமும் ... ... *
வாவிகூபங்களொடு மண்டபவளங்களும் ... ... *
மகாதோ ரணவீதியும் ... ... *
மாமகளுலாவுமில் வளமுளதிருப்பதியெ ... ... *
வைகுண்டம் வைகுண்டமே. ... ... *

* சகுசப்பால் - முலைப்பால்.

## (உஉ) விருத்தம் - தீர்த்தவிசேஷம்.

கபிலமாதீர்த்தமுங் கனபிரம்மதீர்த்தமுங் ... ... *
கருணைமா விஷ்ணுதீர்த்தம் ... ... *
காமுருமயேச்சுரத் தீர்தம்வச்சிரதீர்த்தம் ... ... *
கண்டிடும் வசிட்டதீர்தம் ... ... *
கலையைதுவிலகிடுஞ் சங்கசக்கிரத்தீர்தம் ... ... *
கதைதீர்த்தம் பத்மதீர்த்தம் ... ... *
கனகதீர்தமும் பில்வதீர்தம்பரசு ... ... *
ராமகாருண்ணிய தீர்தம் ... ... *
நவில்துராரோசணத் தீர்தமும்ஸ்ரீமஹா ... ... *
நாராயணத் தீர்தமும் ... ... *
நல்லபஞ்சாயுத தீர்தமுடனேகதிமை ... ... *
கல்கிடும் வருசதீர்தம் ... ... *
திலைலபடில்முத்தியாஞ் சேஷதீர்தம்எனவெ ... ... *
செப்புபதினெண் தீர்தமும் ... ... *
தேவர்கபிலேச்சுரன் கபிலமாரிஷிவனர் ... ... *
திருப்பதியெ வைகுண்டமே. ... ... *

## (உங) அகவல் - கிரிவிசேஷம்.

க. ஹரிதிருச்சரணம் - புஷமலர்சொழுதே
பர்வதவளத்தைப் - பகருவேன்கேளும்
உ. சேஷமாமலையுஞ் - சிறப்புடனுயர்ந்தப்
பூசுரர்வேதப் - புகழ்மிகுமலையும்
ங. கெருடமாமலையுங் - காஷிசோநல்ல
அருளதுகொடுக்கும் - அஞ்சனகிரியும்
ச. விருஷபமாமலையும் - வேதவேதாந்த
ரசனையோகிருந்த - நாராயணகிரியும்
ரு. வேங்கடாசலமுமாய் - விளங்குமோர்சைலம்
பாங்குடனேழு - பருவதங்கண்டீர்
சு. மலைவளமெல்லாம் - மகிழ்ந்திடவெளிதோ
சிலசிலசொல்வேன் - தெரிந்தமட்டிலுமெ
எ. ஆனையும்அரியும் - அதியுறவாடும்
பூனையும்எலியும் - புணர்ந்துறவாடும்
அ. மானுமிவேங்கையும் - மருவியேநிற்குந்
தேனுவும்புலியுஞ் - சேர்ந்துயேநிற்கும்



கூ. சந்தனம்முதலாய்த் - தழைத்திடுதருவும்
பைந்துணர்கொடியும் - பரவியதனெகம்
கo. மல்லிகைமுதலாய் - வாய்ந்தநன்மலரும்
சொல்லியதுளசி - சூழ்ந்தவனமும்
கக. மாமலர்பரவும் - வராகபுஷ்கரணியும்
சுவாமிபுஷ்கரணியாந் - தண்புனற்றடமும்
கஉ. பாண்டவதீர்தமும் - பாபநாசனமும்
ஆண்டருள்கொடுக்கும் - ஆகாசகங்கையும்
கங. அந்தரகங்கையும் - அறமதுமிகுந்த
நந்தனவனஞ்சூழ் - ராமதீர்தமும்
கச. கிருமியதுவில்லாக் - கிஷ்ணமாதீர்தம்
குமாரதாரக - தீர்தமாங்குளமும்
கரு. தோஷமேவிலக்குந் - தும்புருதீர்தமும்
சேஷமாதீர்தம் - தேவதீர்தமுமே
கசு. வைகுண்டதீர்தம் - வளசரசுவதியாம்
கைவலியச்க்கிரத் - காரணத்தீர்தமும்
கஎ. இப்படித்தீர்தம் - ஏழுமாமலையில்
முப்பதிரட்டி - இருமூன்றுகோடியெ
கஅ. தீர்தமாமிதனைத் - தெரிந்தமட்டுரைத்தேன்
மூர்த்தியாம்ஹரிசெய் - முகூர்தமுமுறைப்பேன்
ககூ. சேஷமாமலையில்ச் - சேவடிபதித்தார்
பாஷ்யநரசிம்ம - பதியுமாயுதித்தார்
உo. ஆதிவருக - ஷூரியகர்தானே
நீதிலாவந்த - க்ஷேத்திரபாலகரே
உக. பாண்டவர்தன்னைப் - பாதுகாத்தவரை
யாண்டவரெனவே - யமைந்தவர்ஹரியெ
உஉ. வெங்கடேசவரராய் - மேதினியோர்க்குச்
சங்கடம்விலக்குந் - தயாநிதியெனவெ
உங. மூலமாஞ்ஸ்ரீனி - வாஸமூர்த்தியுமே
ஆலிலைதுயிலும் - ஹரியவர்கண்டீர்
உச. உச்சவஸ்ரீனி - வாஸராய்வருவார்
உயர்ந்திடுங்கொலுஸ்ரீனி - வாஸருமாவார்
உரு. மெச்சிடும்போக - ஸ்ரீனிவாஸருமாய்
விமானமேல்ஸ்ரீனி - வாஸருமிவரே
உசு. தேவருமுனிவருஞ் - செகத்துளவரசரும்
யாவரும்பரவும் - ஆதிநாராயணன்
உஎ. ஆகாசராஜன் - அழகுளமகளை
விவாகமேசெய்து - வந்தகோபாலன்

௨௮. கட்டளைப்படிதன் - காணிக்கைதுரையில்
வட்டியிட்டடேன - வாங்குமாமூர்த்தி
௨௯. திருவாய்மொழிக்கிச் - செவியதுகொடுப்பான்
ஹரியெனப்பணிவோர் - அகமதையடுப்பான்
௩௦. அலர்மேலுமங்கா - அம்பாசமேதன்
பலசுரர்பணியும் - பங்கயப்பாதன்
௩௧. சொர்ணமாமலையான் - சொர்ணமண்டபத்தான்
சொர்ணகோபுரத்தான் - சொர்ணதீர்த்தத்தான்
௩௨. அற்புதமகிமை - யளவிடக்கூடாத்
திருப்பதிதன்னைச் - சிந்தையிற்றுதித்தே
௩௩. தருமசீலையுமவள் - தனையனும்பதியும்
அருமையாம்மாமி - யவள்பெருங்கணவனும்
௩௪. ஐவரும்வந்தார் - ஹரிஹரியென்றார்
செய்வதுயினிமேற் - செப்பிடக்கேளும்.

(௧௯) தரு - சவுராஷ்ட்டி - அட்தாளசாப்பு.

கண்டார்வேங்கடகிரியவனை இந்தக்
காசினிவரவும்உல் லாசமாயவனைக் (கண்டார்)

௧. ஸ்ரீபூமிதேவிநாயகனை
தினரக்ஷகதிவ்யக் ஞானதாயகனை நாலுந்
ஸ்ரீவச்சதேவமாதவனை
ஜகத்தையும்வளர்குந்திரு மூர்த்தியாதவனைக் மூன்று (கண்டார்)

௨. மாணிக்கமகுடமஸ்தகனை
வடமொடுகடகசேயூர ஹஸ்தகனை முத்தின்
வேணுவின்கானப்பிரியனை
வேண்டிமாந்தால் விடாதவைரியனை தன்னை (கண்டார்)

௩. ஆகாசராஜபூஜிதனை
அழகார்பத்மாவதி யனையும்போஷிதனை மிகு
பாகவதற்கருள்பகவனைப்
பாரத்தைச்சுமந்து ரக்ஷிக்கும்பகவனை பூமி (கண்டார்)

௪. காமிதபலங்கொண்டுப் பவனை - வில்லும்
கதைவாள்சங்குசக்கிரங் காத்தெடுப் பவனை
சுவாமிபுஷ்கரணியுள்ளவனைப் பல
தாசர்களாடச்சந்தோஷமுள் ளவனை (கண்டார்)

௫. தாமரைக்கண்ணனென்பவனைத் துளசி
சாளிக்கிராமஹாரத்தைத் தரித்திலங் குவனை
மாமறைப்பொருளாய்வந் தவனை - பத்தர்
மனத்திற்குடியிருந்து வரங்கள்தந்தவனைக் (கண்டார்)



௬. பக்ஷிவாகனனைப் பாவனனை இந்தப்
பாரோரடியளந்த பாதபங்கஜனை
லக்ஷ்மிவேங்கடநாராயணனை இந்த
நெரிஷைமகன்றன்னை நேருங்காரணனைக் (கண்டார்)

(௨௪) விருத்தம்.

மாமியார்தொட்டிற்சேயும்மதுணன்பொற்பதுமைதானும் ... *
மாமனார்நிம்பத்திரம் வைத்தடிவணங்கினார்கள் ... *
தேமொழிதருமசீலை சிறுவனையிடையில்வைத்துத் ... *
தாமிகவணங்கினின்றாள் தனையனைக்கொடுத்திலாளே ... *

(௨௦) தரு - ராகம் - சங்கராபரணம் - அடதாளச்சாப்பு.

பல்லவி.

காணிக்கைசெலுத்தினார்-பாரும் அந்தக்
காரிகைதவிரமற்ற யாரும்

அநுபல்லவி.

வேணுகானஸ்ரீ வேங்கடரமணர்கண்
காணவெதிரென்று கனகப்பதுமையென்று (காணிக்கை)

௧. பொன்னின்றொட்டிலுஞ்சேயும்- கொடுத்தார் கையிற்
பூண்டவேப்பிலைத்-தினை விடுத்தார் *
பன்னகசயனனைப் பணிந்துபணிந்தடுத்தார்
பிறந்தனைசெலுத்தினோம் பாருமென்னத்தொடுத்தார் (காணிக்)

௨. பத்தினியாள்சொன்ன சொல்லை யங்கே
பகர்ந்தனளோசற்று மில்லை
மற்றவருடனந்த மங்கையும்வணங்கினள் *
வந்தொருமடத்திலே வசிக்கவுமிணங்கினள் (காணிக்)

௩. ஜீயர்முதலுள்ள ஆசாரியர் நாலுஞ்
செழிக்குமஹாந்தா வதிகாரர்
மாயனைதெரிசிக்க வாருமெனவெசொல்ல
வந்துதொழுதாரந்த வையமென்னசொல்லக். (காணிக்)

(௨௫) விருத்தம்.

மடந்தையுமகனுமங்கோர் மடந்தனில்வசித்தாரப்போ ... *
தடர்ந்ததற்பிசியுலோண மாகியாதமுமன்று ... *
திட்முறவலங்கரித்தார் தேன்மொழிமீதுதேவர் ... *
ஹடமிகவிளைத்துக்கொண்டு ஹரியுமோரதத்தில்வந்தார் ... *

(உ௬) தரு - ராகம் - ஆரபி - தாளம் - திருபுடை.

பல்லவி.

ரதத்திலேறினாரே - சதுர்வித - பதத்தில்மீறினாரே.

அநுபல்லவி.

சததம்அடியவர்பதத்தைத்துதிசெய்து தமிழின்வேதத்தைப் பாடவே
ஸஹஸ்ரநாமமும்புகழ்ந்துபுகழ்ந்தரிதாசர்களுங்கொண்டாடவே

௧. பூரிபேரிகாளிதுந்துமி புணரியெனவதிற் தொலிக்கவே
புகலும்நாகசுரஞ்சகலவாத்தியம் புதுமையெனவுமுழ பலிக்கவே
பாரிவரசர்முராரியெனவந்து பரவிக்கரத்தையஞ்ச லிக்கவே
பகரும்வேங்கட கிரிநாயகன் பாதசேவையும்ப லிக்கவே (ரதத்தி)

௨. ரத்னமணிமுடி மஸ்தகத்தினில் நிலவுகதிரெனத் தயங்கவே
நிகரில்பலபல சகலபூஷணம் நிறைந்தவுடலென மயங்கவே
பத்தர்தனது கரத்தின்சாமரை பரவியடிக்கடிக் கியங்கவே
பாசமகற்றிய தாசராடியெ பாடநாரதர் * தியங்கவே (ரதத்தி)

௩. தாசர்கூட்டமும் ராஜர்கூட்டமும் சகலஜனங்களும் பெருக்கவே
தருணமெனஹரி சரணந்தருசனந் தனக்குவருபவர் னெருக்கவே
ஸ்ரீசனதுஆவேசங்கொண்டுசில ஜலங்கள்நடித்துக்கொண்டிருக்கவே
ஸ்ரீனிவாசரும்நானாவலங்கிருத சித்ரரதத்தில்வந் திருக்கவே (ரதத்தி)

௪. குடைகள்சிலர்மலர்தொடைகள்சிலர்பலபடைகள்சிலர்கொண்டுவருகவே
குறைவில்பலபலவிருதுமடியவர்கொண்டுஹரியிடம் பெருகவே
கடலினிடைதுயி லுடையஹரியெனக்கனிந்தெவருமன்பினுருகவே
கருணைவேங்கட ரமணன்றேரினிற்காக்ஷியெவருக்குந்தருகவே. (ரத

(உ௫) விருத்தம்.

ஹரிரதாரோஹணம தானைப்போ ... ... *
தாசர்களும்அடியவரும் அளவில்லாத ... ... *
பிரியமுடன்கற்பூர தீபங்காட்டிப் ... ... *
பேருலகோர்சேவித்துப் பெருமையாகப் ... *
பரிவட்டஞ்சந்தனமும் பலருங்கொண்டு ... ... *
பார்த்திபர்தேங்காயுடைத்துப் பாவித்தோண்டு ... *
புரிவரும்பூசுரரும்வடத்தைக்கையில் ... *
பூண்டிட்டார்ரதம்நடக்க வேண்டிட்டாரே ... *

(உ௬) ராகம் - மோஹனம் - தாளம் - ஆதி.

பல்லவி.

ரதமோடி வருதுதுபார் அதிசயமாகவே
வேங்கடேசரும் நீதமாயதின்மீதுலாவ



அநுபல்லவி.

விதவிதமாயலங் கிருதமதுகூடியெ
பதிவிருதையினிட சதனையுந்தேடியே (ரதமோடி)

௧. ஹரிதாசர்வடம் பிடித்தே
அடிக்கடி நடித்தே ஹரிஹரியென்று
ஆவல்தீரவெ சேவைசெய்து
பிரியமற்றுதி படித்தே பெருமையாகத்
திரைகடலொலியென முரசுகொட்டிடென
அரிலைமகனை யென தடியிற்கொடுகொடென (ரதமோடி)

௨. சதுர்வேதம் முழங்கிடவே
கிருததீபஞ்சூழவே மறையவர் சன்னைத்
தாத்திமித் தாத்திமித் தாத்திம்மெனமிதித்
தாடிப்புளங்கிடவே விருதுகள்சூழ
வீரியடால்குடை சூரியபானுனி
மீறியமகுடசிங் காரமுடனே (ரதமோடி)

௩. மலர்மாரிசுரர்பொழியத்
திருவாயின் மொழியால் வந்தடியவர்
வாழ்த்திவேங்கட மூர்த்தி வீதி
வீதி நல் வழியால் கோசாய்மடமுனே
வந்தொரு தந்திர விந்தை புரிந்திட
அந்தணர்வந்து பணிந்து தெரிந்திட (ரதமோடி)

(உ௭) விருத்தம்.

கோசாய்மடத்தின்முனுல்லாசரதம்வந்துஅதிக ... ... *
குருராமுடனே நிற்கவும் ... ... *
ராஜாதிராஜரும் பூசுரானேகரும் ... *
அவ்வடமெடுத் திழுக்கத் ... ... *
தாசர்களுல்லாசமொடு சன்னைகள்மிதிக்கவும் ... ... *
சற்றுமசைவின்றி நிற்க ... ... *
ஸ்ரீசாமிதென்னவிந்த மென்றுபெரியோர்களிவை ... ... *
செப்புவா ரொப்புவாரே ... ... *

(௨௩.) தரு - ராகம் - பைரவி - தாளம் - திரிபுடை.

பல்லவி.

கோபமென்னசொல்வாய்தேவா தேர்நடக்காத
கொள்கைசொல் மஹாநு பாவா

அநுபல்லவி.

பூவாள்வளரும்மார்பா புகழ்வேங்கடப் பிரதாபா — (கோப)

௧. வேந்தர்குறைசெய்தாரோ வேதாகமந்தெரிந்த
வேதியர்குறைசெய்தாரோ ஓதேவனே வேதியர்
சாந்தவைசியர்குறையோ சரணமதிற்பிறந்த
தரணிமக்கள்செய்யுங் குறையோ
பாந்தநல்லடியார்கள் பத்திக்குறைவுமுண்டோ
பணிவிடைக் குறைதானுண்டோ
ஏன்தானிப்படிவந்த - தெளியோர்களும்வருந்தக் (கோப)

௨. பாலவிருதர்களெல்லாம் பசியாற்பரதவிக்கப்
பார்ப்பதழகோதேவனே ஓ - தேவனே பார்ப்ப
மூலஸ்ரீனிவாஸ மூர்த்திபூசையும்நிற்க
முறையோமாதவ பூபனே
மேலேவெய்யலில்நின்று வேந்தர்களும்வருந்த
விதியோ பதுமநாபனே
பாலரழிசயனனே பதுமநன்னயனனே (கோப)

௩. சூத்திரம்பிடிக்காமற் சூத்திரம்பிடித்தோமே
சூத்திரதாரிநீயே கபடநாடக சூத்திரதாரிநீயே
பிரார்த்தனைக்குறைவுண்டோ பாவிகளெவருண்டோ
பாகவதர்செய்பிழையுண்டோ ஓதேவனே
பிரீதனேயெவர்மேலெ பிழையுண்டோஉன்கையாலே
பிடிக்கமாட்டாயோமாலே - ஓதே
கீர்த்திமருவும் வேங்க டாத்திரிவளர் மூர்த்தியே கோப)

(௨௮) விருத்தம்.

வேதியரெவருமிந்த விதத்தினிற்றுதிகள்செய்து ... ... *
நீதிசேர்வேங்கடேச னித்தனைவணங்கும்போது ... ... *
ஆதிநாரண னுமங்கோ ரந்தணன்றனதுமேலே ... ... *
கோதிலாமருளோநன்றாய்க் கூட்டினூராட்டினரே ... ... *



(௨௪) தரு - ராகம் - கமாஸ் - தாளம் - ஆதி.

பல்லவி.

ஸ்ரீசனது - ஆ வேசங்கொண்டவர் நடித்தார்
திருப்பதிவேங்கடரமண (ஸ்ரீசனது)

அநுபல்லவி.

பாசமகலும்ஹரி தாசர் நடுவிலொரு
கேசரிபோலேவுல் லாசமாகவெ (ஸ்ரீசனது)

௧. சிந்தைமகிழவா னந்தநிர்த்தனமிடுவார்
திருதிகெனவெரியும்நெய்ப்
பந்தங்களையுட லந்தனிற்புணர்ந்திடுவார்
அந்தணரெவரையும் பிந்தவிலக்கிக்கொண்டு
கந்தனுடனிருந்த காரிகைதனைக்கண்டு (ஸ்ரீசனது)

௨. வாருமிவள்தனைப் பாருமெனவேபிடிப்பார் இந்த
மடந்தையைமகனுடன்
சேரப்பிடித்துத்தன் தேரினிடம்வந்தாடிப்பார்
கோரினபடியெ கு மாரனைவண்டியில்
ஆருமறியத்தந்தாலத் தேரும்நடக்குமென்று (ஸ்ரீசனது)

௩. நாலுபேரிந்தா பாலனைவரங்கேட்டார் இந்த
நாரிதவிரஅவ
ராலேசொன்னது போல் அடியில்கிட்ட
நாலெட்டுவயதிலிப் பாலன்படைத்தால்வண்டிக்
காலுக்கிடுவேனென்று ஜாலஞ்செய்கிறுளென்று (ஸ்ரீசனது)

(௨௯) விருத்தம்.

ஸ்ரீசனுவேசங்கொண்டோர் செப்பிடத்தெளிந்தங்குள்ள ... *
பூசுரரனேகர்வந்து பூவையைமறித்துக்கொண்டு ... ... *
தோஷிநீசொன்னவாறு சுதனைவண்டியிலேதந்து ... *
ஈசனைவணங்கிப்போவென் றேசுவார்பேசுவாரே ... ... *

(௨௫) தரு - ராகம் - மோஹனம் - அடதாளச்சாப்பு.

பல்லவி.

ஈசனுனைவிடுவனோ வேங்கடகிரி
வாசனுனைவிடுவனோ

அநுபல்லவி.

கூசாமற்பிள்ளையைக் கொடுப்பதாகச்சொல்லிக்
கூசிஞல்விடுவனோ கொடுகொடென்னகல்லி (ஈச)

க. இப்படியேயெண்ணினாய் பிள்ளையைப்பெற்று
சற்பனையேன்பண்ணினாய்
கற்புடையவளே நீ கவலையேன்படுகிறாய்
இப்புதல்வனைக்கையில் இனியேன்வைத்திருக்கிறாய் * (ஈச)

உ. மூடவன்ஹரியைவேண்டினான். குதிரையிற்பொன்
முடிப்புடன்வைத்தாண்டினான
படவன்றனை நீயர்தப் பணத்தைப்பறிப்பையென்றான்
மூடவன்றெடரப்பொன்னின் முடிப்பைக்கொண்டவன்சென்றான் (ஈ)

ங. கிழவிநெய்தரச்சாற்றினாள் காசாண்டிநெய்
முழுதும்விளக்கிட்டேற்றினாள்
கழுவாதுகிச்சடி காசாண்டியினிற்செய்தாள்
அழிவில்மண்டபத்திற்கண் டவளும்பலவினைக்கெய்தாள் (ஈச)

ச. கோரும்வரத்தைக்கொடுப்பான் தன்காணிக்கை
குறையில்வட்டியிட் டெடுப்பான்
நாரியேவுனதுகு மாரனைவிடுவானோ
மீறினாலுனைவட்டி சேரவென்றிடுவானோ (ஈச)

ரு. ஆரும்அறியமாட்டாரே நீகோரின
தரிந்துஹரியுங்கேட்டாரே
வாரிஜாக்ஷனுங்கிருபை வைத்தாலின்னம்பெறுவாய்
கோரினபடியேகு மாரன்றனைத்தருவாய் (ஈச)

(கூ0) விருத்தம்.

இப்படிமறையோர்சொல்ல வேந்திழைகணவன்மாமி ... *
மைப்பொலிகுழலினாளை மைந்தனைவாரிந்துகொண்டு ... *
வெப்புறுந்தழலில்வெண்ணெய் விழுதல்போலுருகிவாடி ... *
எப்படிவிதியேயென்று இடிக்கின்றார்துடிக்கின்றாரே ... *

(உகூ) தரு - ராகம் - உசேனி - அட்தாளச்சாப்பு.

பல்லவி.

ஏதடிஇப்படி - எண்ணினாய் நீதான்
எப்போதுபிரார்த்தனை பண்ணினாய்

அநுபல்லவி.

காதலும்அறியாமல் கவில்வதுந்தெரியாமல்
இதென்றுங்குறியாமல் சிறுக்கியாய்த்திரியாமல் (ஏதடி



பாவிநீசொன்னதைப் பண்ணடீ கோ
பாலனைவேண்டின தென்னடீ இந்தத்
தேவன்றேர்வண்டியின் முன்னடீ உந்தன்
செல்வனைக்கேட்கிற தென்னடீ
ஆவலால்நாங்களோர் மூவரும் வேண்டின
நல்லாமற்பிள்ளையைக் கொல்ல நீவேண்டின (ஏதடி)

பிள்ளையைக்கொல்வது தன்மமோ அடி
பேயேயுனக்குப்பெண் ஜன்மமோ சும்மா
உள்ளதைச்சொல்லென்ன வன்மமோ உந்தன்
உள்ளவினையால்வந்த கன்மமோ
எள்ளளவாகிலும் எங்களையோர்பேச்சு
விள்ளாமலல்லோ விபரீதம் வரலாச்சு (ஏதடி)

தங்கப்பதுமையுந் தொட்டிலும், பசி
தாழ்ந்திடவேப்பிலை மட்டிலும் இன்று
மங்களமாம்ஸ்ரீநி வாசனைக் கண்டு
வந்தித்துத்தந்தோமுன் யோசனை
எங்களுக்கொன்றுந் தெரியாமற்போச்சுது
மங்கையேநாமு மயங்கிட லாச்சுது (ஏதடி)

(கூக) விருத்தம்.

கணவனும்மாமனாருங் கவலையேமிகுந்துகேட்க ... ... *
குணமிகுந்தருமயிலைக் கோதையுங்குனிந்துநின்று ... *
மணமகன்றனையும்மாமன் மாமியார்தனையும்பார்த்து ... *
இணைக்கயல்விழியினாளு மியம்புவாளியம்புவாளே ... *

(உஎ) தரு - ராகம் - காம்போதி - அட்தாளசாப்பு.

கண்ணிகள்.

என்னநான்சொல்லுவே னெந்தன்பிரார்த்தனை பிராணநாதா வேங்க
டேசனைப்பிள்ளையி னாசையால்வேண்டினேன் பிராணநாதா
முன்னமோர்தணை அன்னமுண்கேனென்று பிராணநாதா உங்கள்
முன்னவர்சொன்னது மென்னமறந்ததோ பிராணநாதா

பிள்ளையில்லார்க்குப் பெருநரகென்றாரே பிராணநாதா அந்தப்
பேச்சுக்காய்நானொரு பேச்சுநினைத்தது பிராணநாதா
விள்ளவென்றாலும் மிகமனம்வாடுதே பிராணநாதா இந்த
மேதினிதன்னில்மா பாதகியாகினேன் பிராணநாதா

௩. பெற்றவனென்றுவுரைத்தால்போதுமென்று பிராணநாதா நானும்
பேதமையாய்நினைத் தோதினேனோர்மொழி பிராணநாதா
கர்த்தனும்வேங்கட காரணன்நேரினிற் பிராணநாதா வண்டிக்
காலுக்குத்தந்திடப் பாலனைவேண்டினேன் பிராணநாதா

௪. தப்பாமற்கெர்ப்பஞ் சரித்திடக்கண்டனன் பிராணநாதா பின்னை
தான்பிறந்திட்டபின் நான்மறந்தேனதைப் பிராணநாதா
சொப்பனங்கண்டது துக்கமிருந்தது பிராணநாதா அதைச்
சொன்னால்வைவீரென்று உன்வியிருந்தேன்நான்பிராணநாதா

௫. அப்புறம்நானரி பொற்பதம்வேண்டினேன் பிராணநாதா வய
தைந்துஅளவும்நீச் சிக்கையதாகினேன் பிராணநாதா
அப்பன்வயிறு வலிப்பதைக்கண்டோமே பிராணநாதா நாம்
யாத்திரைவந்தபின் பார்த்திலையேவலி பிராணநாதா

௬. பிரார்த்தனைநீங்கள் செலுத்துமளவுமென் பிராணநாதா எந்தன்
பிரார்த்தனையெப்படிச் சேர்த்திடுவேனென்று பிராணநாதா
தோத்திரஞ்செய்தரி கீர்த்தனம்பாடினேன் பிராணநாதா ஹரி
க்ஷேத்திரமாகவே தேர்த்தொழில்பூண்டனர் பிராணநாதா

௭. கண்டுபிடித்தென்னைக் கண்டிதஞ்செய்கிறார் பிராணநாதா ஹரி
கற்பனைதானினி யெப்படியோவென்றன் பிராணநாதா
மண்டலத்தில்வசை கொண்டவளாகினேன் பிராணநாதா எந்தன்
மைந்தனையெப்படித் தந்திடுவேனையோ பிராணநாதா

௮. பெண்புத்தியாலே பிழைமோசம்போனேனே பிராணநாதா இந்தப்
பேச்சுமகத்தான யேச்சகருள்ளாகினேன் பிராணநாதா
கண்மணிபாலன்செய் புண்ணியமென்னமோ பிராணநாதா மிகு
காரணன்வேங்கட நாரணனே துணை பிராணநாதா

(௧௨) விருத்தம்.

பத்தினிசொல்லச்சொல்லப் பிராணநாயகனுந்தன்னைப் ... *
பெற்றதாய்த்தந்தையாரும் பின்னுமுள்ளவருங்கேட்டுப்... *
புத்திரன்றன்னைக்கொல்லப் பூண்பரோவிரதமென்று ... *
பெத்ததாயலப்பேயென்று பேசுவா ரேசுவாரே ... *

(௨௮) தரு - ராகம் - செஞ்சுருட்டி - ஆடிதாளசாப்பு.

பல்லவி.

ஏண்டியிப்படிநீதான் வேண்டினாய் பாவி
ஏண்டியிப்படிநீதான்

அனுபல்லவி.

வேண்டினையேயிப்படி விபரீதமாகித்
தாண்டிபோலானாயே சுதனுக்குத் துரோகி (ஏண்டி)



௧. பெற்றமகன்சுகமா யுற்றால்சந் தோஷம்
மற்றதற்கிடர்செய்தால் மகத்தான தோஷம் (ஏண்டி)

௨. தானேபாலனடையார்க்குத் தந்தபான் மேலே
பூனைகுடிக்குமென்ற புதுமைபைப் போலே (ஏண்டி)

௩. புத்தாம்நரகுறமற் பெற்றதே அருமை
ஹத்திசெய்தால்நரக மனந்தமாய் வருமே (ஏண்டி)

௪. ஆரனருஷமாய்நீ யாருடன் சொன்னாய்
தேரிடஞ்சென்று தெருவிலே நின்றாய் (ஏண்டி)

௫. தேஞ்சாவிலமுதமாய்க் காஞ்சானுந் தானே
தாஞ்சாமருந்துண்பாரோ தரணியில் மானே (ஏண்டி)

௬. சேயைப்பெற்றபுண்ணியத் தாயென்றறிந் தோமே
மாயன்பேர்செ லிய மோசப்பேயென்றறிந் தோமே (ஏண்டி)

௭. வஞ்சகிவுனைப்போலே பிரபஞ்சத்திலார் சொல்லாய்
பஞ்சமாபாதகிவுன்தன் னெஞ்சமென்ன கல்லா (ஏண்டி)

௮. ஏதடிவேண்டினாய்குலபாதகி நல்லவோ
பாதகியுன்னையேகொன்றிப் போதுநாங்கள் செல்லவோ (ஏண்டி)

௯. சற்றுமெம்மையோசியாமல் மெத்தநீ சண்டாளி
முற்றுமகனுக்குறைத்தல் குற்றமல்லோ நீலி (ஏண்டி)

௧௦. ஒருமுப்பதின்மேற்பிள்ளை மருவிக் கட்டினையே
அருப்பபிச்சைபெற்று உருகிற்கொட் டினையே (ஏண்டி)

௧௧. வண்டியினில்மகனைக் கைக்கொண்டுதருவாயோ அக்கர
வண்டினியெப்படிமனங் கொண்டு வருவாயேடீ (ஏண்டி)

௧௨. ஸ்ரீநிவாசனைவேண்டித் திருப்பிக்கொள் சுதனை
மாநிலந்துதிக்குமுன்னை மடக்கத கேலிதனை (ஏண்டி)

(௧௩) விருத்தம்.

பதியொடுமாமன்மாமி பலபலஜனங்கள்யாரும் ... ... *
விதவிதமாகப்பேசி மெல்லியையவையும்போது ... ... *
சுதனைநீவண்டிக்கிப்போ தருசடன்தருவையென்று ... *
முதுமறையோர்கள்யாரும் மொழிந்திட்டார்மொழிந்திட்டாரே.*

(௨௯) தரு - ராகம் - அடாணா - தாளம் - ரூபகச்சாப்பு.

பல்லவி.

போதுபோக்கலேதுவிள்ளடீ உந்தன்
புத்திரனைத்தேர்ச்சக் காத்தினிற்றள்ளடீ

அனுபல்லவி.

பாதகிநீயென்ன தோதகஞ்செய்கிறாய்
ஸ்ரீதரன்பாதத்தை போதினாலெய்கிறாய் (போது)

௪. தேரிங்கேநின்றுளன்னேரம் உனைக்கண்டு
தேஜஸ்பிடித்தாரே நீயும்
கோரினகோரிக்கை யாருந்தெரிந்திடக்
கூறிப்படித்தாரே என்ன
காரியம்நீசும்மா நேரஞ்செய்யாதே ரு
மாரனைவண்டியிற் றுராய்நீவாராய் (போது)

௫. சொன்னசொல்மாறுவ தென்னமகத்தான
தோஷம்அறியாயோ முன்பு
மன்னரிச்சந்திரன் தன்னிடதேவிக்கு
வந்ததறியாயோ
அன்னத்துடன்மகன் றன்னைக்கறிசெய்
தாளுற்கருளுந் திரங்கேட்டிலாயோநீ (போது)

௬. ஈசனிரதம் நிலைநின்றுபோஜனம்
எங்களுக்கேவிரதம் ஸ்ரீநி
வாஸனுக்கோர்கால பூஜையுன்றலே
வழுவிலென்ன சுகிர்தம்
நேசமாய்சொல்லிய ஸ்ரீசனுடமைக்கு
ஆசையினாலே இ லேசப்பட்டேன்சும்மா (போது)

(௩௪) விருத்தம்.

போதுபோக்காதேயுன்றன் புதல்வனைக்கொடுப்பாயென்று *
வேதியரெவருமிந்த மெல்லியைவையும்போது ... ... *
காதலன்றன்னைப்பார்த்துக் கண்கணீர்சொரியவார்த்து ... *
ஸ்ரீகாமுகுந்தாவென்று தேம்பியின்பியம்புவாளே ... *

(௩௫) தரு - ராகம் - புன்னாகவராளி - தாளம் - ஆதி.

பல்லவி.

என்னசெய்வேன்ஹரியே மைந்தனைக்கேளா
தென்னைநீயா தரியே

அநுபல்லவி.

என்னமோபேதைநான் சொன்னதெவர்க்குந்துரோதம்
வைழமீதிலோஉனக் கித்தனைபிடி வாதம் (என்ன)

௧. மகனையெப்படிக்கொடுப்பேன் என்வீட்டார்முன்
வந்துஎப்படி யடுப்பேன்
வெகுநாட்பிள்ளையில்லாமல் வெலிந்துபெற்றெடுத்தேனே
பகவானேஉனதுதேர்ப் பலிக்கென்றுஅடுத்தேனே (என்ன)



௨. பக்தவச்சலனல்லவோ பாறையும்பெண்ணு
யுற்றதுன்பதத்தல்லவோ
பெற்றநான்சொன்ன விபத்தைநீதீராயோ
புத்திரன்மேல்கிருபை வைத்துநீகாராயோ (என்ன)

௩. கவலைமிகத்தருகிதே மைந்தனைக்கண்டால்
கண்ணீராருய்ப் பெருகுதே
அவசரப்படிற்புத்தி தவறுமென்பதுபொய்யோ
அடியாள்மேலிப்படி அடஞ்செய்கிறீரய்யோ (என்ன)

௪. சொன்னபடியே மகனே இதோவந்து
நின்றான்லோகரக்ஷகனே
முன்னொருவரந்தா யென்னன்குரக்ஷிக்காயே
இன்னொருவரம்மைந்தன் றன்னைரக்ஷிப்பாயே (என்ன)

௫. ஈசாவுனையே - நம்பினேன் வேங்கடகிரி
வாஸாஉனையே நம்பினேன்
ஆசையுடனோநா னன்றுவேண்டிக்கொண்டேன்
மோசஞ்செய்யாதேயின்றுன் முன்னேவேண்டிக்கொண்டேன் (என்)

(௩௬) வஞ்சித்துறை.

மாதுநீசும்மா - போதுபோக்காதே ... ... *
ஸ்ரீதானுக்கிப் - போதுதாசுதனை ... ... *

(௩௭) விருத்தம்.

மறையவருரையுந்தாய்சொல் வார்த்தையுங்கேட்டுப்பாலன் ... *
விரைவுடனம்மாவென்ன விதமிதுவென்றுகேட்கச் ... *
சிறுவனேஉனக்குநானித் தேவனைவேண்டமாயன் ... *
உரைப்படிகேட்டானென்னு முரைக்குரைஉரைக்கின்றானே *

(௩௮) வது - தரு - ராகம் - காம்போதி - அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧. என்னநீவேண்டின தின்னமுரைத்திடாயன்னையே வேங்க
டேசன்பிரார்த்தனை பேசினதென்னசொல் லன்னையே

௨. உன்னைப்பெறுமுன்னஞ் சொன்னபிரார்த்தனைமைந்தனே அது
சொன்னாலெவர்களும் நன்றாகவேசுவர் கந்தனே

௩. அப்படிச்சொன்னதிற் றப்பிதமுண்டோசொல்லன்னையே அந்த
இப்போதுஎன்னிடஞ் செப்பிடுவாயென்தன் அன்னையே

அ

௪. முப்பதின்மேலிந்த சர்ப்பக்கிரீசனை மைந்தனே உன்னைக்
கெர்ப்பித்துப்பெற்றிடச் செப்பினைதொன்றுண்டு கந்தனே

௫. கோரினபிரார்த்தனைப் பேரென்னசொல்லுவாயன்னையே அதைக்
கொடுக்காமலேன்சும்மாய் தடுமாறுகிறாயென்தனன்னையே

௬. தேரின்வண்டிக்குக் குமாராஉனைத்தரகோரினேன் அதை
நேருய்கொடுக்கவி சாரமுடனேபால்மாறினேன்

௭. கொடுத்ததைக்கேட்கில் அடுத்ததுபகையென்றுஅன்னையே நீயுங்
கூசியேநீமனக் கிலேசப்படலாமோ அன்னையே

௮. எடுத்துமுலையுண் கொடுத்துவளர்த்தயென் பாலனை உனை
யெப்படித்தேர்வண்டிக் கொப்பிப்பதப்பாவென் பாலனே

௯. சொன்னசொல்மாறுவ தென்னமகத்தானதோஷமே அந்தத்
தாயனுடைமைக்கு நீயழுதாலென்ன பூஷமே

௰. உன்னைக்கொடுப்பதற் கென்னமனம்வருமைமந்தனே எந்த
ஊருஞ்சிரிக்கவே ஆறுக்குள்ளானேனே கந்தனே

௧௧. மாயனைவேண்டிஅநியாயஞ்செய்வார்களோஅன்னையே ஊரின்
வாய்மூடயாருக்குச் சாயும்அதைச்சொல்லாயன்னையே

௧௨. தாயென்றுகூப்பிடுவாயே உனைத்தந்து வாடவோ யாருஞ்
சீயென்றும்பேயென்றும் ஆயாசமாஞ்சொல்லைத்தேடவோ

௧௩. நேயமாயென்தனை மாயன்பதத்திடுவாயே அந்த
நித்தன்வரத்தின்னம் புத்திரனைப்பெறுவாயே

௧௪. தாயின்முலையின்னம் நீயும்மறந்தில்லைமைந்தனே உயர்
சாதுக்கள்வார்த்தைகள் ஓதத்தெரிந்ததோகந்தனே

(௬௭) விருத்தம்.

தாயொடுமகனுமிந்தத் தத்துவமுனாற்றத்தன்னை ... *
மாயனர்பதத்தினின்று மகிழ்வுடன்தருவையென்று ... *
வாயினாற்சொல்லுமிந்த மழலைதன்வார்த்தைகேட்டுச் ... *
சேயனேஉனக்கேதிந்தத் திட்டமெனமட்ந்தைசொல்வாள் ... *

(௬௮) வரு - தரு - ராகம் - கெண்டா - தாளம் - ரூபகச்சாப்பு

பல்லவி.

இந்தத்துணிவுவந்ததேதடா என்தன்கண்ணின்மணியே
மைந்தனேகிட்டவந்து ஓதடா



அநுபல்லவி.

என்தன்வயிற்றில்வந்துபிறந்தையே பாவியாமென்
இன்றுவிடுவோமென்று மறந்தையே

௧. முலைக்குடிமறக்கிலையேகந்தனே இந்தகியானவார்த்தை
மொழியவெப்படித் தெளிந்தாய்கந்தனே

௨. கலத்திலன்னத்தைக்கலக்கிஊட்டென்பாய் தொட்டில்தனில்விடுத்துக்
கனியப்பாடிஎனைநீ யாட்டென்பாய்

௩. அப்பிச்சிகொடுப்பாயென்றலட்டுவாய் என்னையம்மம்மாவென்று
அடிக்கடிமுலைகுடிக்க மலட்டுவாய்

௪. பற்பலவிளையாட்டுமாடுவாய் சிலபாலருடனே
பரிந்துசண்டைபுரிந்துங் கூடுவாய்

௫. அப்பனிடத்தென்றப்பிதஞ்சொல்வையே அவரென்னையதட்டி
அடிக்கவெனதுமடிக்குட் புல்வையே

௬. செப்புமழலைவார்த்தைக்கிள்ளையே வேங்கடேசருன்னைத்
தேடிப்பிடித்தாரென்ன கொள்ளையே

௭. அஞ்சுவயதினபிஞ்சுமதியமே உனக்கிந்தகியான
அறிவுகிடைத்தலரியி லுதயமே

௮. பஞ்சபாதகியென்செய்வேன்மகனே உனைத்தேரிற்கொடுத்துப்
பார்ப்பேனோபழி யேற்பேனோமகனே

௯. அப்பனேயெனதய்யனேமகனே உனைத்தேரிற்கொடுத்து
ஆறவோமனந் தேறவோமகனே

௰. சொப்பனங்கண்டபோதேதெரிந்தேனே சுதனேவுனக்குத்
துரோகியவளென்றாகித் திரிந்தேனே

௧௧. அன்னையெனவென்முன்னேவருவையே உனைவாரியெடுத்து
அணைத்திடையி லிணைக்கப்பெறுவையே

௧௨. பன்னகேசன்ரதத்தினடியிலே உனைகொடுக்கமனது
பாயுமோஅநியாயம் படியிலேஇந்தத்துணிவு

(௬௯) வஞ்சித்துறை.

அழுதுநீசும்மா - பொழுதுபோக்காதே ... ... *
குழவியைக்கொடுத்துத் - தொழுதுநீபோடி ... ... *

(௩௩) வது - தரு - ராகம் - செஞ்சுருட்டி - அட்தாளசாப்பு.

பல்லவி.

அழாதேநீசும்மாவாடி யுன்தன்
அழகுமகனைவண்டி யடியினிற்ருடி (அழா)

அநுபல்லவி.

பழிகாரிநீசும்மாபோடி யென்னைப்
பாராமல்ஏன்வேண்டிருய்நீ நிர்மூடி (அழா)

௧. எடுக்ாதசுமையேநீ யெடுத்தாய் தலைக்
கெடுத்தகல்நெற்றிக்கேறக்கை விடுத்தாய்
படுக்காளியெனவேபே ரெடுத்தாய் பிள்ளைப்
பாலைக்காய்ச்சிப்பூனைபருகவேன் கொடுத்தாய் (அழா)

௨. சிறுவனுடன்மெள்ள நழுகிருய் இங்கே
சிணுங்கிச்சிணுங்கிச்சும்மா திண்ணைமெழுகிருய்
உரகசயனனைத் தொழுகிருய் நீயும்
உரலிற்றலையிட்டோங்கும் உலக்கைக்கழுகிருய் (அழா)

௩. வண்டிக்கிடுவேனென்று பேசி இங்கே
வந்துகொடுக்கப்பால்மாறுருய் கூசி
சண்டியாயிருக்கிருய் சீசீ யினித்
தாளாதுமகன்றன்னைத்தருவாய்நீ தேவகீ (அழா)

(௩௪) வது - தரு - ராகம் - தன்னியாசி - தாளம் - ஆதி.

பல்லவி.

ஹரியேயென்னசெய்வேன் வேங்கடகிரி
ஹரியேயென்னசெய்வேன்

அநுபல்லவி.

சிறுவனைக்கொடுத்தாயே செலுத்தெனத்தடுத்தாயெ
பரதவிக்கிறேனிப்போ பாதகிநானேதுசெய்வேன் ஸ்ரீதரனே (ஹரி)

௧. நானேப்பழிகாரி மைந்தனுனக்கென்
றேனோர்மொழிகூறித் தேனீயானதுநன்ருய்ச்
சேர்த்துக்கொடுப்பதுபோ லானேனுனுமிப்போது
ஆரணனே - காரணனே - பூரணனே (ஹரியெ)



௨. மகனையெப்படியெடுப்பேன் ஐயய்யோதேரின்
வண்டிக்கெப்படிக்கொடுப்பேன் ஜகத்திலெவர்தான்பெற்ற
செல்வனைக்கொடுப்பார்கள் வகையறியாமற்போனேன்
மச்சவனே - கச்சபனே - அச்சுதனே (ஹரி)

௩. சிறுவன்றனைவிடுவாய் அதற்கென்மேலுன்
றேர்நீநடத்திடுவாய் அரிவைநானிதோவண்டி
யடியிற்படுத்திடுறேன் கருணைகொடுத்தருளுங்
கருப்பதியெ - மருட்பதியே - திருப்பதிவாழ் (ஹரி)

(௩௯) விருத்தம்.

வெண்ணெய்கைநழுவித்தீயில் விழுந்திடில்மிஞ்சுமோதான் *
அண்ணலேயுனக்குச்சொன்ன அரியபிராத்தனைக்கிப்போது *
எண்ணமிட்டென்னசெய்வேன் எனதுமேவிரதமோட்டிக் *
கண்மணிபாலன்றன்னைக் காரெனநாரிசொல்வாள் ... *

(௩௫) வது - தரு - ராகம் - அசாவேரி - அடதாளசாப்பு

பல்லவி.

கந்தனைக்கேட்காதே யெந்தனைக்கொடுக்கிறேன்
கருணைசெய்வாய் ஹரியே

அநுபல்லவி.

ஐந்துவருஷமொன்றும் அறியாதசேயனைத்
தந்துயிர்தரிப்பேனோ தயைநீசெய்மாயனே (கந்த)

௧. மூர்த்திகொடுத்ததைப் பிந்திக்கேட்பாரிந்த
மூவுலகிலுமில்லையே ஆண்டோர்
மூப்பதில்நான்சொன்ன தப்பிதப்பிரார்த்தனை
மூடற்குமொப்பில்லையே நானும்
வந்தியாயின்னமிருந்தாலுமிதனை
வாதைக்கிடமுமில்லையே ஐயா
மாயனேநீமுன்ச ஊமாயஞ்செய்திப்போ
வழக்கிடவென்தொல்லையே பல
அந்தணர்வந்தெனையடுக்கிருர் அவர்
ஆளுக்கோர்சொல்லாகத் தொடுக்கிருர் பெற்ற
கந்தனைக்கையிலே யெடுக்கிருர் வண்டிக்
காலுக்குத்தாங்களே கொடுக்கிருர்களாம் (கந்த)

௨. கைப்பிடித்தென்னைக கலரும்புருஷன்
கனிந்துறவாடுவாரோ யெந்தக்
காலமும்நொண்டிநொண்டி சொல்லுமாமியைக்
கண்டுதள்ளாடுவேனோ வேத
விற்பனமாமனுர் வேண்டும்பணிவிடை
வேலைக்குத்தேடுவாரோ இந்த
மேதினியோர்மஹா பாதகியென்றே
விளம்பிடவாடுவேனோ என் தன்
அப்பன்மகனைக் கேளாதே என்னை
யாகிலுந்தாரேனிப் போதே நல்ல
சர்ப்பகிரியிதின் மீதே யேதுஞ்
சற்பனைசெய்ய லாகாதே சாமி (கந்த)

௩. எத்தனையானாலும் புத்திரனுக்கிடம்
யார்தான்செய்துசகிப்பாரையா உனை
எண்ணியேநற்றுதி பண்ணியபேர்கட்
கிடர்செய்தால்யார்சகிப்பாரையா லோக
கர்த்தனுகும்நீயே பத்தருக்கிரங்கிடும்
காரணம்யெவர் வகிப்பாரையா யாவுங்
காப்பவனுனையன்றி வேறுண்டோ எனச்சொல்லிக்
கட்டியெவர்ஜயிப்பாரையா என்மேல்
சித்திரத்தேர்தன்னை யோட்டுவாய் என்தன்
செல்வன்மேல்நீகிருபை சூட்டுவாய் புகழ்
எத்திசைக்கும்நிலை நாட்டுவாய் வெங்க
டேசனென்றெங்கும்பா ராட்டுவாய் சாமி (கந்த)

(௬௦) வஞ்சித்துறை - பிராமணர்சொல்வது.

தண்ணீரெனவே - கண்ணியபேருக் ... ... *
கெண்ணெயோதருவாய் - பெண்ணேநீசொல்லாய் ... *

(௬௧) தரு - ராகம் - செஞ்சுருட்டி - தாளம் - ஆதி.

பல்லவி.

வாடாகண்மணியே உனைத்தேரின்
வண்டியிற்கொடுக்கிறேன் சண்டாளியெடுக்கிறேன் (வாடா)

அனுபல்லவி.

வாடாஒருமுத்தந் தாடாதேர்மிசைச்
சேஷாசலனுடனே கூடநீவிளையாட (வாடா)



௧. அப்பாகண்மணியே உனைநித்தம்
ஆதரவாய்வளர்த்துப் பாதகியானேனே அப்பா
சொற்பமாய்வேண்டிறு லொப்பாரறியென்றுன்னைக்
கற்பிக்குமுன்வேண்டின திப்போசெலுத்தரூன்னே (வாடா)

௨. நாஞேபழிகாரி உனைநித்தம் நன்ருகவேவளர்த்துக்
கொன்றிடவேவிளைத்த நாஞேபழிகாரி *
கூனியாய்முளைத்தேனே ஊனியாய்விளைத்தேனே
மாநிலத்தோர்கைதொட்ட தேனீயாகினேன்கிட்ட (வாடா)

௩. தொட்டிலிட்டாட்டினேனே உனைத்தேர்வண்டிக்
கிட்டவெள்ளாட்டினேனே அப்பாதொட்டி
இஷ்டமகனேவுனை விட்டிங்கேயடுத்திட்டேன்
கிட்டமற்றொருவண்டிக் கெட்டகான்படுத்திட்டேன் (வாடா)

(௬௨) விருத்தம்.

மறையவர்வையவிந்த மடக்கையுமகனைத்தாவி ... ... *
ஹரிதிருரதத்தின்வண்டி யருகினில்வந்துநின்று ... ... *
துருசுடனிடத்திற்பெற்ற சுதனையும்படுக்கவைத்து ... *
மருவலவண்டிதன்னில் வந்துதான்படுத்திட்டாளே ... *

(௬௩) வது - தரு - ராகம் - புன்னாகவராளி - அடதாளசாப்பு.

பல்லவி.

ஹரியே நீ வருவாய் உன்பிரார்த்தனை
யானதைப் பெறுவாய்

அனுபல்லவி.

பெருமையுடனெனக்கோர் பிள்ளைநீகொடுத்தாயே
பேதையேதோசொன்ன பேச்சாலேதடுத்தாயே
பிரியமுடனென தருமைமகன்மிசை
யிரதம் நடத்துவை வரதவேங்கட (ஹரியே)

௧. முப்பதின்மேலே பிள்ளையைபெற்றேம்
னப்பாஉன்னாலே
அப்புதல்வனையுனக் கொப்பிப்பேனெனுஞ்சொல்லை
மெய்ப்பித்துக்கேட்கிருய் தப்பிதமுனக் கில்லை
விதனமெனக்கென்ன சுதனையுனக்கென்ன
மதியில் நினைத்ததே சதியாய்முடிந்தது (ஹரியே)

௨. மைந்தனைக்கொடுத்தேன் நானும் மறு
வண்டியிற்படுத்தேன்
ஐந்துவருஷமாய்நான் தந்திடாதிருந்ததுக்
கெந்தனைவட்டியா யி தாமுகுர்தனே
இரதமதையதி துரிதமுடனேம
திருவர்மிசையிலும் வரவும் நடத்திக்கொண்டு (ஹரியே)

௩. ஹரியேஉன்பாதம் வணங்கத் தர்
தருளும்பிரசாதம்
சிறுவனைத்தேரிலெ செலுத்தெனைப்பிடிவாதஞ்
செய்தேரென்னையுங்கூடச் சேர்க்கில்மிகவிநோதம்
தீனரக்ஷக ஞானதக்ஷக
ஸ்ரீனிவாஸஜ நார்த்தனோத்தம (ஹரியே)

௪. மகவரங்கொடுத்தாய் ஊடஞ்செய்தின்று
வாங்கியேவிடுத்தாய்
லகுவாயின்னொருவரம் நீகொடுத்திடுமெய்யா
நெடுந்தேர்கனத்திடாமல் நீநடத்திடு மய்யா
நீலமேகவி சாலதேஹனே
நீரஜாக்ஷகம் பீரவேங்கட (ஹரியே)

(௪௨) விருத்தம்.

அங்கனைமணியுமிவ்வா றரிதிருச்சரணத்தியானம் ... ... *
பொங்கமாய்ச்செய்துபெற்ற புதல்வனுந்தானுமாக ... ... *
அங்குளரதத்தின்வண்டி யடிதனிற்படுத்தாளப்போ ... *
வேங்கடரமணன்றேரை விடுத்திட்டார்கடநிட்டாரே ... *

(௩௮) வது - தரு - ராகம் - தன்னியாசி - தாளம் - ஆதி

பல்லவி.

அதிசயமிது வதிசயமெனவோத
மதுவருகிறுபாரும்

அனுபல்லவி.

பதிவிருதையும் ஹரி பதத்துதிபாடவும்
பாரிலுள்ளபல பத்தர்கொண்டாடவும் (அதிசய)

௧. தோத்திரஞ்செய்யும் வார்த்தையைக்கேட்டுச்சர்
தோஷம்மனதில் காட்டி அதி
துரிதமுடனேயிந்தத் திருமகனையெடுக்குந்
தோகையெனக்கை நீட்டிப்
பார்த்திடும்மடவி மகனையெனக்காட்டிடப்
பார்ப்பமெதனவேதலை யனைகள்முன்பாட்டிட (அதிசய)



மடந்தையொருவண்டியில் மகனொ வண்டியில்
வந்துஅவர்படுக்கவே சதுர்
மறையவர்விரைவொடு ஹரியே வையென
வடத்தைக்கையிலெடுக் கவே
சரிசரியினியிதோ வருகிறோமெனச்சொல்லி
தலையயசைக்குதெனத் தரணியேவரும்புல்லி (அதிசய)
அசையுதுரதமினி விசைகொடுமிழுமென
அரகாதட்டிவருவே மிகு
புஜவலியுடையவர் கஜமுடன்சன்னையைப்
பூட்டித்தள்ளிக்கொண் டேவே
புஜகசயனன்செய்த புதுமைநானென்னசொல்லத்
திருஜகமகிழுமந்தத் தேரும்பின்னுக்குச்செல்ல (அதிசய)

(௪௩) விருத்தம்.

கந்தார்த்தம் - ராகம் - மோஹனம்.

தேர்பின்னடக்கதிது யாருந்தெரிந்திதென ... ... *
தேவா வெனப்பரவியே ... ... *
கேருஞ்சிரங்கள்மிசை தோளுங்கரங்கள்கூஉய்ப் ... *
பாரும்மிறைந் தரிஹரீ ... ... *
குருரஞ்செய்துகிருபை தாரும்உமக்கென்ன ... ... *
கோபம்எனப் பரவியெல் ... ... *
சோரும்வணங்கமஹா மேருந்திரும்பியதென் ... ... *
இரதம் நடக்கா வருதே ... ... *

(௩௯) தரு - ராகம் - மோஹனம் - அட்தாளசாப்பு.

பல்லவி.

இரதம்நடந்துவருதே தர்மசீலையின்
விரதம்முடிந்து வருதே

அனுபல்லவி.

இரதம்நடத்துமய்யா வரதவேங்கடய்யா
ஹரியே யெனவும்நல்ல பெரியோர்களுமேசொல்ல (இரதம்)

(௪௪) விருத்தம் - கந்தார்த்தம்.

அடமேவியோத்திந்த மடவாளுடன்மகனை ... ...
யனிதேரின்வண்டி யடியில் ... ...

வடவேங்கடாசல மஹாமூர்த்திவாங்கியபின் ... ... *
மனதுசந்தோஷமாகி ... ... *
வடமேபிடித்தவர்கள் வடமேபிடித்திடவும் ... ... *
மருள்நீந்து மன்னைகர்ந்து ... ... *
குடமாமுலைச்சியொடு குமரன்றனைத்தாண்டி ... ... *
குதித்துஇரதம நடந்ததே ... ... *

(௪0) வது - தரு - ராகம் - மோஹனம் - அட்தாளசாப்பு.

பல்லவி.

குதித்தே ரதம்நடந்ததே அவர்மேல்தானா
பதித்தே ரதங்கடந்ததே

அநுபல்லவி.

குதித்தேரதம்நடக்க மதித்தேதேவருங்கண்டு
துதித்தார்புஷ்பவருஷம் உதிர்த்தார்சந்தோஷங்கொண்டு (குதித்

(௪௫) விருத்தம் - கந்தார்த்தம்.

ஹரிதாசர்பிரியாத திருநாமமேபஜனை ... ... *
யவர்செயுங்கோஷ மொருபால் ... ... *
ஸ்வரதாளமேளகின் னரீமத்தள்ங்களொடு ... ... *
சுருதி கீத கோஷமொருபால் ... ... *
பெரிதானபேரிபொக் காளாபூரிககாரி ... ... *
பிரியாதகோஷ மொருபால் ... ... *
குரையாழியெனவதிர கோவிந்தனிரதமது ... ... *
குடுகுடெனவே நடந்ததே ... ... *

(௪௧) வது - தரு - ராகம் - மோஹனம் - அடதாள்சாப்பு.

பல்லவி.

குடுகுடெனநடந்ததே தாயை மகனை
வெடுவெடெனக் கடந்ததே

அனுபல்லவி.

குடுகுடெனநடந்து வெடுவெடெனக்கடந்து
திடுதிடெனப்புகன்று நெடுவீதிதனிற்சென்று (குடுகு)



(௪௬) விருத்தம் - கந்தார்த்தம்.

சண்டமாருதமுட னிருண்டமேகங்கள்பல ... ... *
சார்ந்ததெனவே தாணியோர் ... ... *
கண்டவர்வெருண்டிடவே வண்டிகளுருண்டு ... ... *
காரணமிருந் தூளிகள் ... ... *
எண்டிசைகளும்நிறைய வண்டர்களெலாம்பரிய ... *
வெவருமிவர் மஹிமைதெரியத் ... ... *
தண்டுளவணிந்திடுவை குண்டநிரதம்நிலையிற் ... *
றானேதழையச் சென்றதே ... ... *

(௪௨) வது - தரு - ராகம் - மோஹனம் - அட்தாளசாப்பு.

பல்லவி.

தானே தழையச்சென்றதே ரதந்தனக்குத்
தானே நிலையில் நின்றதே

அனுபல்லவி.

ஞானசூரியனுதய மானதேவர்க்குமங்கே
வானோர்புஷ்பவருஷந் தானேசொரிந்தாரங்கே (தானே)

(௪௭) விருத்தம் - கந்தார்த்தம்.

திருவேங்கடேசனிரு தேர்வந்துநிலைநின்ற ... .. *
செயலறிந்தார் ஜகமுளோர் ... ... *
ஒருமாதுபெருசாது சிறுபாலனிவர்மீது ... ... *
உயர்தேர் நடந்தபடியால் ... ... *
வருபோதவர்கள்செய்தி தெரியாதெனச்சகல ... ... *
மானுஷோத்தமர் தேடவே ... ... *
மருவேதுமில்லாத சிறுவனுடனேயழகு ... ... *
மயிலாளெழுந்து வருவாள் ... ... *

(௪௮) வது - தரு - ராகம் - மோஹனம் - அட்தாளசாப்பு.

பல்லவி.

மயிலாள்எழுந்துவருவாள் மைந்தனைக்கட்டி
மார்போடணைத்துப் பெறுவாள்

அனுபல்லவி.

அயிலார்விழியாள்மா[illegible] அருளைப்புகழ்ந்துபாடி
இ[illegible]ன்றுனை[illegible]று யெடுத்தேனெனைக்கொண்டாடி (மயிலா)

(சஅ) விருத்தம்.

பாலனேஉனைநாணங்கப் பதுமறைபங்தேர்வண்டிக் ... *
காலிலேதந்தேனன்றோ கண்மணிமகனேயெந்தன் ... ... *
பாலிலேவுனக்குப்பக்ஷம் பரிவுடனுளதோவென்று ... ... *
சாலவேமகனைநன்றாய்ச் சாற்றுவாள்தேற்றுவாளே ... *

(சச) வது - தரு - ராகம் - மோஹனம் - அடதாளசாப்பு.

பல்லவி.

அப்பனேவாடா கண்மணியே ஸ்ரீ
யப்பனேவாடா

அனுபல்லவி.

அப்பனேயுனைநானே சர்ப்பனைசெய்தேனே
துற்புத்திபடித்தவென் கெர்ப்பத்திலுதித்தவென் (அப்பனே)

க. வண்டிக்காலிலேஉன்னைக் கொண்டுபோய்கொடுத்தேனே
சண்டாளியெனவேபேர் கொண்டுவந்தெடுத்தேனே (அப்பனே)

உ. அன்னையெனவேகிட்ட நின்றாயேயெனதிஷ்டப்
பன்னகேசன்றந்திட்ட பொன்னேநான்வளர்த்திட்ட (அப்பனே)

ங. பெற்றவளுனைக்கொல்லப் பேய்போலேஅடுத்தேனே
பக்தவச்சலன்கிருபை பார்த்துப்பேரெடுத்தானே (அப்பனே)

ச. கன்னெஞ்சிவளென்றென்னைக் காட்டினார்ஹரிதானே
என்னுடனுனைப்பெற்ற தின்றிந்தகிரிதானே (அப்பனே)

ரு. ஸ்ரீநிவாஸனைமறந்தேன் முன்புநிஜரிக்கா[illegible] *
மாநிலந்துதிக்கவே மைந்தாஉம்மைரக்ஷித்தார் (அப்பனே)

(சரு) விருத்தம்.

மைந்தனையிடையில்வைத்து மாமயில்தருமசீலை ... ... *
வந்துமாதவனைவாழ்த்தி மணவாளன்மாமன்மாமி ... ... *
முந்தவேமூர்ச்சையான மூவரையெழுப்பவென்று ... ... *
வந்தனைசெய்துபின்னும் வசனிப்பாள்பஜனிப்பாளே ... *





(சரு) வது - தரு - ராகம் - ஆனந்தபைரவி - தாளம் - ஆதி.

பல்லவி.

துணைவாராய் ஹரியே க
ருணைதாராய்

அநுபல்லவி.

மணமிகுதுளசி மார்பசிங்கார
பணிமலையுடையபஞ் சாயுதசூரா (துணை

க. பங்கஜநயனா பன்னகசயனா
வேங்கடரமணவி னோதநல்வயனா
மங்களதேஹா வளரும்வைபோகா
எங்கினும்வளர்ந்திடும் ஏகவனேகா (துணை

உ. ஹரிநாராயண துரிதநிவாரண
கரிமுறையிடவந்து காத்தருண்மாயா
சிறியவளிடத்தருள் செய்துசந்ததியைப்
பிரியமுடன்கொடுத்தருள் பெருகுஞ்சஹாயா (துணை

ங. சுதனைவுனதுதிரு ரதத்தின்வண்டியிற்றச
மதனமாய்வேண்டின முதலைச்செலுத்தென்றன்னை
வித்னப்படுத்திரத மதனையெமதிருவர்
முதுகில்நடத்தியவச் சுதனேமாதவனே (துணை

ச. பயத்தைக்கொடுத்துப்பின்னப் பயத்தைக்கெடுத்துடன்அ
பயத்தைக்கொடுத்துப்பாதாம் புயத்தைக்கொடுப்பவனே
நயத்திலுனையன்பரி தயத்திற்றுதிக்கஜசுவ
ரியத்தைக்கொடுத்தருளும் நித்தியமூர்த்தி (துணை

ரு. வாசவனொடுசுரர் பூசனைபுரிந்திடும் *
ஈசனேதிருப்பதி வாசவிலாசனே
தாசர்கள்துதித்திடும் நேசனேஅதிகவுல்
லாசனேஹரிஸ்ரீநி வாசன்நீதானே (துணை)

(ருo) விருத்தம்.

பதிவிரதைஹரியைப்போற்றிப் பரவியேநிற்கும்போது ... *
முதுமறையவன்றாய்தந்தை மூவரும்மூர்ச்சைநீங்கிச் ... ... *
சுதனெடுந்தாயைக்காணத் தருவியேவருகும்போது ... *
நிதிகிடைத்ததுபோற்கண்டு நேசித்தார்பாஷித்தாரே ... *

(சக) வது - ராகம் - ஆனந்தபைரவி - தாளம் - அடதாளசாப்பு.

பல்லவி.

அப்பனேமகனே கண்மணியே உனக்
கொப்பாருலகிலுண்டோ உயர்தநன் மணியே (அப்பனே)

அநுபல்லவி.

சர்ப்பகிரியோன்றந்த கனியே தேரின்
சக்கரமோவுனக்குத் தந்தோம்பொற் பணியே (அப்பனே)

க. உன்னைப்பெறக்கோரிக்கை செய்தோம் இந்த
உரகேசனைமறந்து வுனக்குநோய் செய்தோம்
அன்னைசொன்னதைகேட்டு வைதோம் உன்னை
ஊரியெழுப்பவேநாங்க ளனைவரும் உய்தோம் (அப்பனே)

உ. கங்கையைப்படைத்தபொற்காலன் நம்மைக்
காத்துரக்ஷித்தனர் கருணைவிசாலன்
வேங்கடரமணகோ பாலன் அருள்
விளைந்தவனே யென்றுந் தழைநீயென்பாலன் (அப்பனே)

(ருக) விருத்தம்.

பாலனைவாழ்த்தியங்கப் பத்தினிதனையுந்தேற்றி ... ... *
ஞாலமோரடியாய்ச்செய்த நாதனைப்புகழ்ந்துபோற்றிப் ... *
பாலனுந்தாயுந்தந்தை பாட்டனும்பாட்டியாள்கோ ... ... *
பாலனைவலமாய்வந்து பாடினார்கூடினாரே ... ... ... *

(ருஉ) விருத்தம்.

அங்குளபெரியோரெல்லாம் அவர்முதுகதனில்வாழுந் ... *
தங்கியவடையாளத்தை ஸகலருமறிந்துகீர்த்தி ... ... *
பொங்கியவேங்கடேசன் பொற்பதமதனைவாழ்த்திச் ... *
சங்கையில்லாமற்பாடித் தியாகஞ்செய்தார்தியாகஞ்செய்தாரே ... *

(சஎ) வது - தரு - ராகம் - சஹானா - காபி - ரூபகம்.

பல்லவி.

தேவதேவனேஉன் மஹிமை
செப்பவெளிதோ ஸ்ரீநிவாஸ (தேவ)



அநுபல்லவி.

மூவர்பரவும் வேங்கடாத்திரி
மூர்த்தியேவளர் கீர்த்திபடைத்த (தேவ)

க. வாரிஜாக்ஷனே நந்தகு
மாரதுளசிஹாரதார வாரிஜாக்ஷனே
நாரியொடுகு மாரன்முதுகிற்
றேர்நடத்திவுத் தாரமேசெய்த (தேவ)

உ. அண்டஜபதியே உனைத்தொழுந்
தொண்டர்கள்நிதியே நற்கதியே
மண்டலமதை யுண்டருள்கருந்
தொண்டலே வை குண்டவாசத் (தேவ)

ங. வேங்கடரமணா அடியவர்
சங்கடசமனா சுகமனா
அங்கஜனொடு பங்கஜனவி
ளங்கவருள்பு ஜங்கசயனா (தேவ)

(ருங) விருத்தம்.

இப்படிமறையோர்வேங்க டேசனைத்துதித்துப்போற்றி ... *
மைப்பொலிகுழலாள்தர்ம சீலையைமகனைப்பார்த்துக் ... *
கம்புடையவனேஉன்போற் காசினிதனிலாரென்று ... ... *
செப்பியேஅவனைநன்றாய்த் தோத்திரஞ்செய்குவாரே ... *

(சஅ) வது - தரு - ராகம் - காபி - தாளம் - அடதாளச்சாப்பு.

பல்லவி.

பதிவிரதைநீயே மஹாவிஷ்ணு
பத்தனுன்சேயே பதி

அநுபல்லவி.

ரதியும்புகழ்கொள்சந்திர மதியும்உனக்குநேரோ
துதிகொள்பூமியிலருந் ததிவேறுனைப்பாரோ (பதி)

க. கலியுகத்தினிலே நீயேபலங்
கண்டாய் லகதனிலே
சலியாமல்நீசெய்த தவமின்றுபலித்ததே
சாமிவேங்கடேசன் றனதருள்ஜொலித்ததே (பதி)

உ. மகனைப்பெற்றெடுத்தாய் தேர்வண்டியில்
வைத்துநீ படுத்தாய்
இகத்திற்கொடுக்குந்தெய்வ மிவரென்றறியத்தானே
ஈசன்றேறிருவர்மே லெளிதாய்நடத்தினானே (பதி)

ங, இந்தநற்கதையைப் படித்துக்கேட்போர்க்
கெவர்தான் சமதையே
சந்ததிதனதானிய சம்பத்துகள்தருவார்
சாமிவேங்கடேசன் றனதுபதர்தருவார் (பதி

(ருச) விருத்தம்.

பூசுரரெவருமிந்தப் பூவையைப்புதல்வனைப்பார்த் ... ... *
தாசிகள்சொன்னாரப்போ தந்தனன்றகப்பன்ருயார் ... ... *
மாசிலாத்தர்மசீலை மைந்தனுமாகக்கூடி ... ... *
ஸ்ரீசனைவலமாய்வந்து திருநகர்சேர்ந்தாரன்றே ... ... *

(சகூ) வது - ராகம் - பூபாளம் - அடதாளசாப்பு.

பல்லவி.

ஈசனைத்துதித்தாரே வேங்கடேசா
வாசனைத்துதித்தாரே

அநுபல்லவி.

ஈசனைவைகுண்ட வாசனைப்பத்தர்கள்
நேசனைவளர்ஸ்ரீநி வாசனைப்பணிந்துக்கொண்டு (ஈசனை)

க. தீர்த்தமெலையாடினார் ஹரியைவந்து
சேவித்துக்கொண்டாடினார் ஹரிநாமசத்
கீர்த்தனமதைப்பாடினார் வலமகக்
கிரியைச்சுற்றியேகூடினார்
கீர்த்திமருவும் வேங்க டாத்திரி தனிலேவந்து
க்ஷேத்திரமாகுஞ்சே ஷாத்திரி தனிலேவந்து (ஈசனை)

உ. ஏழுமலையைத்துதித்தே கோவிந்தராஜர்
இருக்கும்பட்டணமதித்தே அங்கேயொரு
நாள்முழுதும்வசித்தே அலர்மேலு
நாயகிதாள்கதித்தே விளங்கிடும்
வாழ்விழி யவளையும் வந்தித்துப்பணிந்தாரே
நாளுஞ்செழிக்கும்பாக நகரில்வண் ங்கினர்தாரே (ஈசனை)

ங. தந்திருப்பதியடுத்தார் மறையோர்க்கன்ன
தானமிகவுங்கொடுத்தார் யாத்திரைசெய்த
விந்தையெவையுமுரைத்தார் தருமசீலை
வேண்டல்சொல்லியே நிறைந்தார்
செந்திருமருவுங் கோ விந்தன் கருணையாலே
வந்தோமெனவேசொல்லி மகிழ்வுடன்மென்மேலே (ஈசனை)



(ருரு) விருத்தம்.

பாரிலுள்ளவருர் ளாவினரெவருமிந்த ... ... *
காரியைப்புகழ்க்குநீதான் கன்றதும்களினாயன் ... ... *
சீரியுங்களைசகலந வீதமிதுவெல்லாம்நீவி ... ... *
ஸ்தாரமாயுரைப்பாயென்னத் தருமசீலையுஞ்சொல்வாளே... *

(ருo) வது - தரு - ராகம் — சௌராஷ்ட்ரம் — அடதாளசாப்பு.

பல்லவி.

என்னசொல்வேனந்தப் பன்னகேசன்கிருபை
தன்னைப்பெரியோர்களே

அநுபல்லவி.

என்னசொல்வேனவர் தன்னைநான்வேண்டலை
சொன்னாலடங்குமோ சொன்னாலடங்குமோ (என்ன)

க. [illegible] வருந்தியெனக்கு
வயதொரு முப்பதுமாச்சு அள
வற்றநதிகள் ஸ்தலங்கள் தெய்வங்களை
வந்தனைசெய்தென்ன வாச்சு யாருஞ்
சந்ததியில்லையென் றெந்தனைக்கண்டவர்
சாடையாய்ப்பேசவு மாச்சு ஒரு
லைத்புருஷன் அன்ன தானத்தைக்கொள்ளாமல்
சாற்றியதாலந்தப் பேச்சு என்னை
வந்தியென்றே யுகைந்தனிற்சொல்வந்த
மாற்றவொருவினைப் பாச்சு ஹரி
மலரடிபோற்றிடலாச்சு மனதொடு
மைந்தன்கீதரிலோ ரதசக்
கிரந்தனக்கிடுவே னெனச்சபு
தந்தனைசொலவே ஹரியருள்
தந்தாரப்பொழுதே அதிசயம் (என்ன)

உ. என்னைமணந்தவர் பொன்னின்பதுமைனம்
ஈகுவேனென்றவர் கூறினார் அவர்
இஷ்டமிருந்தாரிந்த வேப்பிலையைத்தின்று
ஈசனைக்கண்டுடக் கோரினார் அவர்

பன்னியுந்தொட்டிற் குழலியுந்தந்து
பரவுவேனென்று தேறினர் என்தன்
பிரார்த்தனைவேங்கட மூர்த்தியறிந்தொரு
பாலன் உந்தார்வயிற் றுதிஞன் பிறந்
தன்னன்மகனைக்கொ டுப்பாயென்றெனைதன்
அருங்கனாவில்வந்து அரிஞர் மாத
நாச்சுப்பத்தென் றுரை மீறினர்கணவினை
யென்னவென்றெளியேன் இவரொடு
சொன்னவின்றிடுவேன் ஹரிபதர்
தன்னையேதொழுதேன் ஹரிகிருபை
பின்னுமப்பொழுதே தந்தனர் (என்ன)

௯. மைந்தன் அழகுங் குணமுமறுந்தந்த
மாயனைநான்மெத்த மறந்தேன் ஐந்து
வச்சரமாக வயிறுவலிகொண்டு
மகன் அழநான்பரப் பறந்தேன் பல
அந்தணர்சொல்ல வழிந்துபதியொடு
யாத்திரைசெய்யவுந் துறந்தேன் ஹரிக்
கற்பிதமாயவர் செப்பினைதைத்தர
யான்கொடுக்காமலே கரந்தேன் ஹரி
வந்தனர்தேரிலே நின்றனரப்போ
மறையோர்துதிக்கமெய் மறந்தேன் மருள்
வந்தோர்பிடிக்கவு மிருந்தேன்குமரனை
வண்டியிற்கொடுத்தேன் நான்மறு
வண்டியிற்படுத்தேன் ரதம்மலர்
செண்டுபோலவுமே நடத்தினர்
அண்டர்நாயகனே இன்னமும் (என்ன

(௫௬) விருத்தம்.

உறவினரெவர்க்குமில்லா றேதியகருமசிலைச் ... ... *
சிறுவனும்பதியுமன்றுய்ச் செல்வமேமிகுந்துவாழ்ந்தார் ... *
மபிகதையதனைப்பாரில் அறிந்தவர்கேட்டபேர்கள் ... *
சருவசௌபாக்கியம்பெற் றாணியில்வாழ்வமாதோ ... *



வாழி

(௫௭) விருத்தம்.

ஸ்ரீதான்வாழிவாழி திருப்பதிமலையும்வாழி ... ... *
மாதெனுந்நருமசிலை மைந்தனும்பதியும்வாழி ... ... *
வேதியன்சுப்பராயன் விளம்பியதமிழின்வண்டிக் ... ... *
காதையைப்படித்தோர்கேட்டோர் கருத்துடன்பதித்தோர்வாழி

பாயிரத்தில் அச்சிட்டிருக்கும் மங்களத்தை இங்கும் பாடிக்கொள்ளவும்.

ஸ்ரீவேங்கடேசுவராய மங்களம்.

வண்டிக்கால் சரித்திரகீர்த்தனம்

முற்றிற்று.

| | |
|---|---|
| விருத்தம் | ௫௭ |
| தருக்கள் | ௫௦ |
| பாயிரத்தில் | |
| விருத்தம் | ௧௩ |
| தருக்கள் | ௧௮ |
| ஆக. விருத்தம் | ௭௦ |
| ஆக. பாவினம் | ௬௮ |

968